
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.

அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62:10**

**Translated from**
**BS#850**
**Jan-Feb 2009**

**பொருளடக்கம்**


✡ தேவனுடைய தயவும் – உங்களுடைய திரும்புதலும்.................. 2

✡ சார்லஸ் H ஸ்பர்ஜன் தேவனுடைய மனிதன்...................... 7

✡ அர்மகெதோன் யுத்தம்...................... 13

✡ மேசியா – தேவனுடைய தாசன்............. 14

✡ அகந்தை–பொறாமை–கோபம்–கொலை... 18

✡ கேள்வி – பதில்.............................. 19

✡ பகற்பொழுதுக்காக கவனித்துக் கொண்டிருத்தல் ............................ 19



BS Tamil Version - 88

2024

# தேவனுடைய தயவும் - உங்களுடைய திரும்புதலும்

God's Favor - Your Return

**"மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும் சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்." (2 கொரி. 9:8).**

நாம் மற்றொரு வருடத்தின் நுழைவு வாயிலில் இருக்கிறோம். நாம் சற்றே நிதானித்து அனுதினமும் நம்மை வழிநடத்திய தேவனுக்கு நன்றி செலுத்துவோம். "**என் தேவனாகிய கர்த்தாவே, நீர் எங்கள் நிமித்தம் செய்த உம்முடைய அதிசயங்களும் உம்முடைய யோசனைகளும் அநேகமாயிருக்கிறது: ஒருவரும் அவைகளை உமக்கு விவரித்துச் சொல்லிமுடியாது, நான் அவைகளை சொல்லி அறிவிக்க வேண்டுமானால் அவைகள் எண்ணிக்கைக்கு மேலானவைகள்.**" (சங். 40:5). ஒரு சிந்திக்கிற கிறிஸ்தவனாக தேவனுடைய மென்மையான இரக்கத்தையும் அவருடைய அபரிமிதமான கொடையாகிய பராமரிப்பையும் சரியாக நினைத்து போற்றுவதாக இருந்தால் அவனுடைய பிரதியுத்திரமானது சங்கீதக்காரனின் வார்த்தைகளில் நன்கு கூறப்பட்டவையாக இருக்கும். (சங். 116:12-14, 17). "**கர்த்தர் எனக்கு செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தை செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு, கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுவேன். நான் கர்த்தருக்கு செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கும் முன்பாகவும் செலுத்துவேன். நான் உமக்கு ஸ்தோத்திர பலியை செலுத்தி கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுவேன்.**"

2009-ம் ஆண்டிற்கு எதை நம்முடைய சட்ட வாக்கியமாக உபயோகிக்க ஆண்டவர் பிரியப்படுவார் என்பதை குறித்து தியானிக்கையில், 2 கொரி. 9:8-ம் வசனத்திலுள்ள அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகள் எங்கள் மனதைக் கவர்ந்தன. இந்த வசனமானது **(1)** நமக்கு அவருடைய சம்பூரணத்தைக் குறித்தும்; **(2)** நாம் அவருக்கு என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும் குறிப்பாக மற்றவர்களுக்கு உதவியாயிருப்பதையும், ஊழியம் செய்கிறதையும் வலியுறுத்துகிறது. இந்த வசனத்திலுள்ள பிரதானமான கருத்து உதாரத்துவமாகும்.

தேவனுடைய ஆசீர்வாதத்தையும் தயவையும் நாம் கருத்தில் கொள்ளும்போது நாம் ஒரு வளமான ஆசீர்வாதத்தை பெற வேண்டும், ஆனால் அவருடைய மகத்தான கனம் மற்றும் மகிமைக்கேற்ப ஒவ்வொரு நற்கிரியையிலும் விருத்தியடைவதன் மூலம் அவருக்கு எப்படி மற்றும் எந்த அளவிற்கு நமது நன்றியறிதலைக் காட்டலாம்



(1 கொரிந்தியர் 16:1–3)

என்பதை புரிந்து கொள்கிறோம் என்பதிலும் இருக்கிறது. தேவன் அருளும் "**அனைத்திலும் உள்ள எல்லா பரிபூரணத்தையும்**" இன்னும் ஆழமாக பாராட்டவும், "**உறுதிப்பட்டவர்களாகவும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிருபையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாகவும்**" இருக்கவும் "**கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து கொள்ளவும்**" நாம் அதனால் உதவிசெய்யப்படுவோம். "**நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக: நாம் தளர்ந்துபோகாமல் இருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.**" (1 கொரி. 15:58; கலா. 6:9).

உதாரத்துவம் என்பது மற்றவர்கள் செழித்திருப்பதைப் பார்க்க வேண்டும் என்ற நமது மனவிருப்பத்துடன், அதற்காக நம்முடைய செல்வங்களையும், தாலந்துகளையும், நேரத்தையும் மற்றும் கவனத்தையும் அவர்கள் மீது தாராளமாய் பொழிந்தருளுவதாகும்; விசேஷமாக தேவையிலுள்ளவர்களுக்கு அருளுவது என்பதாகும். இது, உணர்வுகள் மற்றும் செயல்கள் ஆகிய இரண்டும் சேர்ந்த ஓர் குணப்பண்பாகும். நம்முடைய உணர்வுகளில் மற்றவர்கள் செழிப்படைவது நம்மை மகிழ்விக்கிறது. இது அவர்களுடைய செழிப்பின் மீது பொறாமை கொள்ளவோ, அவர்களுடைய லாபத்தை இச்சிக்கவோ, அவர்கள் அனுபவிப்பதை நமக்கென்று அபகரிக்கவோ அல்லது நியாயமற்ற போட்டியினால் அவர்களை காயப்படுத்துவதையோ அனுமதிக்காது. நம்மை அவர்களிடம் உதாரத்துவமாய் இருக்கும்படிக்கு உணர்த்துகிறது; அவர்களுடைய செழிப்பில் களிகூரும்படிச் செய்கிறது, அவர்களுடைய வளத்தைப் பெருக்குவதற்கு அவர்களுக்கு உதவுகிறது,

**COURTESY BY :**
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor, Leon Snyder.** Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** www.biblestandard.com

அவர்களில் தகுதியான மற்றும் தேவையுள்ளவர்களுக்கு நமது செல்வங்களை வழங்குவதில் தாராளமாக இருக்கவும் உதவுகிறது. எனவே, உதாரத்துவம் என்பது ஆவியில் தாராளமாகவும், பரந்த மனப்பான்மையுடையவர்களாயும், அதோடுகூட கிரியையிலும் இரக்கமும் உதவுகிற பண்பும் உடையவர்களாயும் நம்மை ஆக்குகிறது.

இத்தகைய உதாரத்துவமுள்ள குணத்தினால் மற்றவர்கள் ஆசீர்வாதம் பெறுவதற்கு நாம் நம்முடைய நேரத்தையும், தாலந்துகளையும், பெலனையும், செல்வங்களையும் மற்றும் செல்வாக்கையும் இலவசமாகக் கொடுக்கிறோம். இது சுயநலத்தில் மையங்கொண்டிருத்தல், கஞ்சத்தனம், பேராசை, அபகரித்தல், அற்பத்தனம் மற்றும் கருமித்தனம் உள்ளவனாக ஆவதைத் தவிர்க்கிறது. மேலும் சுயத்தைப் பற்றி மட்டுமே சிந்திக்காதபடி நம்மைக் காக்கிறது. இது தன்னலமற்றதும், இரக்கமுள்ளதும் கருணையுள்ளதுமாக, மற்றவர்களுக்கு நன்மை செய்வதில் மகிழ்ச்சியடைவதுமான ஒருவனை விவரிக்கிறது. நிச்சயமாகவே, அது ஒருபோதும் நீதியின் கொள்கைகளுக்கு முரணாக செயல்படக்கூடாது மற்றும் அவற்றை ஒருபோதும் மீறுவதாகவும் இருக்கக்கூடாது. சுயநல வாழ்க்கை வாழ்வதிலிருந்தும், நம்முடைய நேரம், தாலந்துகள் மற்றும் செல்வங்களை, பூமிக்குரிய இன்பங்கள், ஆடம்பரங்கள் மற்றும் கேளிக்கைகள் ஆகியவற்றுக்கும், அதாவது தேவனையும் மற்றவர்களையும் அசட்டை செய்யும் அளவிற்கு தவறாக பயன்படுத்துவதிலிருந்தும் நம்மைத் தடுப்பதற்கு உதவிசெய்கிறது. உதாரத்துவம் ஒவ்வொரு வழியிலும் நாம் சரியான சமநிலையிலிருப்பதற்கு நமக்கு உதவுகிறது.

## பவுலினுடைய புத்திமதிகள்

நம்முடைய சட்டவாக்கியத்தில் மட்டுமல்லாது அதோடு தொடர்புடைய வசனங்களான 2 கொரி. 8 மற்றும் 9-லும் கூட தேவன் அப்போஸ்தலனாகிய பவுலின் மூலமாய் நமக்கு உதாரத்துவத்தைப் பற்றிய அற்புதமான எண்ணங்களைக் கொடுத்துள்ளார். அவை ஆழ்ந்த முழுமையான அர்த்தத்தை வெளியே கொண்டுவருகிறது. அதைப்போல, இந்த பொதுவான விஷயத்தை மற்ற வேத பகுதிகள் மூலமாகவும் அவர் செய்துள்ளார். அவைகளில் ஒன்றுதான் அப்போஸ்தலர் 20:35 (A.R.V. மொழிபெயர்ப்பு பார்க்கவும்), அங்கே அப்போஸ்தலன் "**இப்படி பிரயாசப்பட்டு, பலவீனரை தாங்கவும்,..... வேண்டுமென்று எல்லாவிதத்திலேயும் உங்களுக்கு காண்பித்தேன்**" என்றும், "**வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்**" என்ற ஆண்டவராகிய இயேசுவின் வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்றும் கூறுகிறார். நம்முடைய வீழ்ச்சியடைந்த இயல்பின் பொதுவான மனநிலையானது, பெலமுள்ளவர்களுக்கு ஆதரவளித்து அவர்களுடன் ஒட்டிக்கொள்வதும், பலவீனமானவர்கள் அணிதிரண்டு நம்மை ஆதரிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதுமேயாகும். இதுதான் சுயத்தை திருப்திப்படுத்தும் வழி, அதாவது, - வீழ்ச்சியடைந்த இயல்பின் வழி. இருந்தபோதிலும் கிறிஸ்துவின் மெய்யான சீஷனாகிய பிரதிஷ்டை செய்த கிறிஸ்தவனின் முறையோ இதற்கு நேர்மாறானதாக இருக்க வேண்டும். நலன், விருப்பங்கள் மற்றும் மற்றவர்களின் வசதிகளையும், விசேஷமாக தன் குடும்பத்திலுள்ளவர்களையும் விசுவாச குடும்பத்திலுள்ள பெலவீனமான நபர்களையும் கவனித்துக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவில் உள்ள சகோதரர்களில் பெலமுள்ளவர்கள் இயலாதவர்களுக்கும் பலவீனமானவர்களுக்கும் உதவிசெய்வதில் மகிழ்ச்சி அடைந்து அவர்களை கிறிஸ்துவுக்குள் பூரண புருஷராக கொண்டுவரும் அளவிற்கு உதவ வேண்டும். (ரோம. 15:1-3). எபேசுவிலுள்ள மூப்பர்களுக்கு, தேவையுடனிருக்கும் கிறிஸ்தவர்களின் சார்பில் கோரிக்கையாக எடுத்துரைக்கப்பட்டதாக அப். 20:35 இருந்தது.

"ஏன் தேவையிலிருக்கும் கிறிஸ்தவர்களுக்கு ஈவுகள்/பரிசுகள் வழங்கப்பட வேண்டும்?" என்ற கேள்வி இயல்பாகவே எழும்புகிறது. அது செய்யப்படுவதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு: (1) திருப்தி செய்யப்பட வேண்டும் என்று கூக்குரலிடும் அவர்களுடைய தேவைகள் (2) கொடுக்கக் கூடிய திராணி உள்ளவர்கள் கொடுக்கும் பழக்கத்தை பயிற்சி செய்தல் (3) தேவனுடைய அழைப்பு மற்றும் வாக்குத்தத்தங்கள்(4) தேவனுடைய ஈவுகள்/பரிசுகள், குறிப்பாக அவருடைய குமாரனுடைய ஈவு/பரிசு. இவை நான்கும் கொடுப்பதற்குரிய உறுதியான காரணங்களாயிருக்கின்றன.

இது அப்போஸ்தலரின் அனுபவமாக இருந்தது, இது சிந்தனைமிக்க எல்லா ஜனங்களின் அனுபவமாயும் இருப்பதுபோல முறைப்படுத்தி கொடுப்பது ஒழுங்கற்று கொடுப்பதை விட சிறந்ததாயிருக்கிறது. எனவே ஒவ்வொரு வாரமும் தொடர்ந்து முறையாக தங்களால் இயன்றதை தனியாக எடுத்துவைத்துவிடும்படியாக சகோதர சகோதரிகளை உற்சாகப்படுத்தினார். (1 கொரி. 16:2-ஐ பார்க்கவும்). இதின் பலன் பொதுவாக மிகுதியாயும், கொடுப்பவர் மீது அதின் தாக்கம் அதிக பயனுள்ளதாயும் இருக்கிறது. ஏனெனில் இது ஓர் குறிக்கோளை, ஆண்டவருக்காக ஆற்றப்பட வேண்டிய ஒரு ஊழியத்தை மனதின் முன்பாக வைத்திருக்கிறது. பலருக்கு ஆண்டவருக்கென்று ஊழியம் செய்வது என்பதற்கான ஒரே வாய்ப்பு பணம் பங்களிப்பது மட்டுமே ஆகும். எனினும் அர்ப்பணிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளை பரி.பவுல் மற்றும் அவருடைய துணை யாத்ரீகர்களின் முறையை பின்பற்றி சகோதரர்களுக்கு கொடுப்பது சாலச் சிறந்தது. அதாவது, பொதுவான பிரசங்கம் அல்லது வீடு வீடாக சந்தித்து ஆவிக்குரிய வெகுமதிகளையும் ஆசீர்வாதங்களையும் கொடுப்பதும், சத்தியத்தை அச்சிட்ட பக்கங்களின் வாயிலாகவோ அல்லது வார்த்தையின் மூலமாகவோ, இரண்டையும் பயன் படுத்தியோ கொடுப்பதும் சாலச்சிறந்தது.

ஆனால் திறமை, பெலன் மற்றும் வாய்ப்பு குறைவினால் வாழ்க்கையில் இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருப்பவர்களும் இருக்கிறார்கள் அல்லது குடும்ப கடமைகளின் வழியில் உள்ள பொறுப்பினால் அவர்-

களுடைய நேரத்தை முன்னதாகவே அடமானம் வைத்ததால் தடுக்கப்படுகிறவர்களும் இருக்கிறார்கள் - ஆண்டவரை சேவிப்பதற்கும் அவர்மீது தாங்கள் வைத்துள்ள அன்பை எடுத்துரைப்பதற்கும் நடைமுறையான ஒரே வாய்ப்பு ஆண்டவரின் பணிக்கெனவும் அவருடைய ஜனங்களுக்காகவும் தங்கள் வெகுமதிகளைக் கொடுப்பதே ஆகும். ஏனெனில், அத்தகையோரின் உதவி தேவைப்படும் இவ்விதமான அல்லது ஒருமுறை இல்லாமையினாலோ, அல்லது தெய்வீக ஊழியத்தின் இந்த முறையை பற்றிய போதனை இல்லாமையினாலோ, இந்த முறையில் கர்த்தருடைய ஊழியத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் வாய்ப்பை இழப்பது, ஊழியத்திற்கான ஒரு முக்கியமான வாய்ப்பை அவர்களுக்கு மறுப்பதாகவும், அதற்கேற்ப ஆண்டவருக்கு செய்யப்படும் ஒவ்வொரு ஊழியத்துக்கும் வரும் ஆசீர்வாதங்களை அவர்களிட-மிருந்து பறிப்பதாகவும் இருக்கும்.

## உதாரத்துவம் அன்பை வெளிப்படுத்துகிறது

ஆகவே, அப்போஸ்தலன் (2 கொரி. 8-ல்) சபைக்கு கொடுக்கும் குணாம்சத்தை பரிந்துரைக்கவும், அவர்களின் திராணிக்குத் தக்கதான அவர்களுடைய உதாரத்துவம் பெருமளவில் தங்கள் ஆண்டவர் மீதும் சுவிசேஷத்தின் மீதும் வைத்துள்ள அன்பிற்கு அடையாளமாயிருக்கும் என்ற உண்மையை அவர்கள் மீது வற்புறுத்தவும் மிகவும் சுதந்திரமாக உணர்ந்ததை நாம் கவனிக்கிறோம். ஆனால் இதற்கு நேர்மாறாக, முதலாவது, ஜனங்கள் ஆண்டவரின் கிருபையை ஏற்றுக்கொண்ட போது அப்போஸ்தலர் அவர்களிடம் தானதர்ம பணத்தை கேட்கவில்லை என்ற மெய்ப்பாட்டை நாம் கவனிக்கிறோம், ஏனெனில் எவ்வளவேனும் சுவிசேஷமானது பணத்திற்காக வேலை செய்யும் ஆதாயத்திற்காக பிரசங்கிக்கப்படுகிறது என்ற எண்ணத்தை, அதாவது, கூலிக்கான உள்நோக்கத்துடன் போதிக்கப்படுகிறது என்ற எண்ணத்தை அவர்கள் எந்த அளவிலும் பெற்றுவிடக்கூடாது. அதன்படி, நாம் காண்பது என்னவென்றால், பணம் செலுத்துவது பற்றி எந்த ஒரு ஆலோசனையும் கூறாமல் இதே கொரிந்து பட்டணத்-தாருக்கு ஒரு வருடத்திற்கும் மேலாக அங்கே அப்போஸ்-தலன் பிரசங்கம் செய்திருக்கிறார் எவருக்கும் பாரமா-யிராதபடி தன் சொந்த கரங்களினால் கூடாரம் தயாரிக்கும் தொழிலில் தன் கைகளினாலே பிரயாசப்பட்டார். (2 கொரி. 11:7-9; அப். 18:1-3).

சுவிசேஷத்தின் முழுமையான மதித்துணர்ந்து பாராட்டுதல், கொரிந்துவில் உள்ள விசுவாசிகள் மீது ஏற்படுத்திய மாற்றத்தையும் நாம் கவனிப்போம். ஆரம்பத்தில் அவர்கள் தங்களுடைய சிலாக்கியங்களை குறித்து மிகவும் அசட்டையுள்ளவர்களாய் இருந்ததினால், அப்போஸ்தலனாகிய பவுல் தம்முடைய சொந்த கரத்தினால் வேலை செய்து, பிற இடங்களிலுள்ள விசுவாசிகளிடமிருந்து சில உதவிகளை அவர் பெற்றுக் கொண்டிருந்தபோது அவருக்கு பொருளாதார உதவி அளிக்க தன்னார்வமாய் அவர்கள் (கொரிந்தியர்) ஒருபோதும் முன்வரவில்லை. ஆனால், தேவனுடைய கிருபை அவர்களுடைய இருதயத்தில் முழுமையாய் நுழைந்தபொழுதோ, அவர்கள் பெற்றுக்கொண்ட சத்தியத்தின் மதிப்பினை மதித்துணர்ந்து பாராட்ட ஆரம்பித்தனர், சத்தியமானது அவர்களுக்கு நம்பிக்கை, மகிழ்ச்சி, விசுவாசம் மற்றும் குணாதிசயத்தின் விலையேறப்பெற்ற ஆசீர்வாதங்களை அவர்களுக்கு கொண்டு வந்திருக்கிறது என்பதை உணரத் தொடங்கினர். அதன்பிறகு, மெச்சத்தகுந்த விதத்தில் ஆண்டவருடைய ஊழியத்தில் ஒரு உற்சாகமான முன்னோக்கு நிலையில் பொருளாதார ரீதியாக ஏதேனும் செய்ய வேண்டும் என்ற ஒரு வைராக்கியத்தை அவர்கள் பெற்றனர். (2 கொரி. 8:10).

மேலும் இப்போது அப்போஸ்தலன் அவர்களிடம் இருந்து விலகி இருந்ததாலும், அவர்களுடைய பணத்தை அல்ல, தங்களுக்குத் தாங்களே நன்மை செய்து கொள்வதையே அவர் நாடினார் என்பதை அவருடைய போக்கு அவர்களுக்கு நிரூபித்த பிறகு, கர்த்தருடைய காரியத்தில் அவர்களின் திராணி மற்றும் அன்பின் விகிதத்தில் உதாரத்துவத்தின் விளைவாக ஏற்படும் பெரிய ஆசீர்வாதத்திற்கு அவர்களின் கவனத்தை ஈர்க்க அவர் சுதந்திரமாக இருந்தார். இந்த காரியத்தை மனதில் பதிய வைக்க, "**பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில் சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்**" (2 கொரி. 9:6) என்று சொல்லுகிற ஒரு உவமையை அளித்தார். இது நமக்கு நீதிமொழிகளிலுள்ள ஒரு வசனத்தை ஞாபகப்படுத்துகிறது. "**வாரியிறைத்து விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய் பிசினித்தனம் பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு. உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்கும் தண்ணீர் பாய்ச்சப்படும்.**" (நீதி. 11:24,25). தெளிவாக உணரப்பட்ட பாடம் என்னவெனில், அவருடைய இருதயத்-தின் விசாலத்தையும், அதோடுகூட மனதின் விசாலத்தையும் வளர்த்துக் கொள்வதைக் கண்டு, கர்த்தர் மகிழ்ச்சி-யடைகிறார், அதாவது, உதாரத்துவ விகிதாசாரத்திற்கு ஏற்ப, அவரைப் பற்றிய அவர்களுடைய அறிவையும், கொடுப்பதில் சிறந்த உதாரணமாகிய அவருடைய உதாரத்துவத்தையும் அவர்கள் விருத்தி செய்வதைக் கண்டு கர்த்தர் மகிழ்ச்சி-யடைகிறார்.

தேவனுடைய ஜனங்கள் மத்தியில் சில சமயத்தில் முழுமையான வறுமை நிலை ஏற்படுவது என்பது தங்கள் கடந்த கால வாழ்க்கையில் பொருளாதார வளத்துடன் இருந்தபோது, அதில் ஒரு பகுதியை கர்த்தருடைய ஊழியத்திற்கு கொடுத்துதவி தொண்டு செய்ய அவர்கள் தவறிவிட்டனர் என்பதற்கான சான்றுகள்தான் என்று வேத வாக்கியங்கள் எங்கும் அறிவிக்கவில்லை. ஆனால் மேற்கோள் காட்டப்பட்ட தேவாவியால் ஏவப்பட்ட வார்த்தை-கள் இந்த பாடத்தை கற்பிப்பதற்கு மிக நெருக்கமாக வருகின்றன. எல்லா சூழ்நிலையிலும், நாம் இந்த சாட்சியத்தை நம்முடைய இருதயத்தில் வைத்துக்கொள்வது நமக்கு நன்மை தருவதினால், ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் நாளுக்குநாள் நமக்கு வரும் அவரது ஆசீர்வாதங்களில் இருந்து குறிப்பிட்ட அளவை



**“மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும் சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்.”**

**(2 கொரிந்தியர் 9:8).**

கவனமாகவும், ஜெபத்துடனும், அன்புடனும், அவர் நமக்கு கொடுக்கும் சிறந்த ஞானத்துக்கும், நியாயத்தீர்ப்புக்கும் ஏற்ப, அவரது ஊழியத்தில் விதைக்கப்படும் விதையாக ஒதுக்கி வைப்பதற்கு ஆர்வத்துடனும் கவனத்துடனும் இருக்க வேண்டும்.

எத்தனை பேர் தங்களுக்காக இவ்வளவு ஜாக்கிரதையாக இருக்கிறார்கள், தங்களுக்கு வரும் ஒவ்வொரு சிறு வருமானத்தையும் வந்த வேகத்தில் பயன்படுத்துவதினாலோ அல்லது தங்களுக்காகவோ அல்லது தங்கள் குழந்தைகளுக்காகவோ எதிர்கால திட்டங்களை நிறைவேற்றுவதில் மிகுந்த ஆர்வமாக இருப்பதினாலோ, அவர்கள் கர்த்தருடைய ஊழியத்துக்காக எதையும் மிச்சப்படுத்த முடியாது என நினைக்கிறார்கள்! அப்படிச் செய்ததின் மூலம், பிற்பாடு தாங்கள் மாபெரும் தவறு செய்திருக்கிறோம் என்பதை அவர்களில் எத்தனைபேர் காண முடியும்! வியாதியினாலோ அல்லது விபத்தினாலோ அல்லது வங்கி அல்லது வியாபார நஷ்டத்தினாலோ அல்லது வேறு காரணங்களினாலோ திடீரென சேர்த்து வைக்கப்பட்டிருந்த அவர்களது பணம் மறைந்துவிட்டதை காணும் போது அப்போஸ்தலன் சொன்ன பிரகாரமாய் எந்த விதையையும் அவர்கள் விதைக்கவில்லை என்பதை உணரும்போது அதற்காக வருந்துவதற்கு நல்ல காரணம் இருக்கிறது.

## நம்முடைய வெகுமதிகளை மதிப்பீடு செய்தல்

நம்முடைய ஆண்டவர் நம்முடைய வெகுமதிகளை எவ்வாறு அளவிடுகிறார் என்பதை நமக்கு காண்பித்துள்ளார், அதாவது கொடுக்கப்பட்ட தொகைக்கு ஏற்ப அளவிடாமல், முக்கியமாக வெகுமதிகளை கொடுப்பதற்கு தூண்டும் ஆவியின்படி அளவிடுகிறார் - தேவாலய பெட்டியில் இரண்டு காசுகளைப் போட்ட ஏழை விதவையின் மீது கவனத்தை வைத்து அளவிடுகிறார். (லூக். 21:1-4). ஆண்டவரின் மதிப்பீட்டிலிருந்து, அந்த ஏழை விதவை மற்ற எந்த செல்வந்தரையும்விட அதிகமாய் கொடுத்தாள்; மற்றவர்கள் தங்கள் பரிபூரணத்திலிருந்து ஒரு பங்கை கொடுத்தனர், என்றாலும் அவர்கள் அதை உணர்ந்த அளவிற்கு கொடுக்கவில்லை. அவர்கள் ஊழியத்திற்கான இந்த வாய்ப்பையும் இத்தகைய தாலந்தையும் பயன்படுத்துவதில் கவனம் செலுத்துவார்களானால், கர்த்தருடைய ஜனங்களில் எத்தனைபேர் ஆவிக்குரிய ரீதியில் அதிக ஐசுவரியமுள்ளவர்களாய் இருப்பார்கள் என்பதை நம்மால் சொல்ல இயலாது. கர்த்தர் மட்டுமே அதை அறிந்திருக்கிறார். ஆனால், நம்முடைய நல்ல பாடத்தின் தலைப்பு வாக்கியமானது, கர்த்தருடைய ஜனங்களில் மிகவும் ஏழ்மையான ஜனங்களுக்கும் கூட எட்டக்கூடிய ஒரு சிலாக்கியத்தை இந்த வழியில் சுட்டிக்காட்டி, நம்மீது கடமையாக்குகிறது.

மிதமிஞ்சி கொடுப்பதைக் குறித்து ஜனங்களுக்கு எச்சரிப்பது அரிதாகவே அவசியப்படுகிறது. ஆயினும்கூட சில சந்தர்ப்பங்களில் அத்தகைய எச்சரிப்பு சரியானதேயாகும்; வேதாகமத்தில் சில சந்தர்ப்பங்களில் கொடுப்பது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தன்னை சார்ந்திருப்பவர்களுக்கு வறுமையை ஏற்படுத்தும் அளவிற்கு எவரும் கொடுக்கக்கூடாது. அதைப்போலவே, எவரும் பொருளாதார திவாலாகும் நிலையை தனக்கு ஏற்படுத்தி மற்றவர்களுக்கும் இழப்பை ஏற்படுத்தும் அளவிற்கு கொடுக்கக்கூடாது. **“வாரத்தின் முதல் நாளிலே எடுத்துவைப்பது”** பொதுவானதாக இருக்க வேண்டும், அதாவது தேவன் அவனை ஆசீர்வதித்ததின்படியே இருக்க வேண்டும். நம்முடைய செல்வ செழிப்பின் அளவே நம்முடைய தானதர்மத்தின் அளவுகோலாகவும் இருக்க வேண்டும். இதிலும், மற்றெல்லா விஷயத்தைப் போலவே வேத வாக்கியங்கள் நமக்கு தெளிந்த புத்தியுள்ள ஆவியை பதியவைக்கின்றன. (2 தீமோ. 1:7).

**“உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்”** (2 கொரி. 9:7) உற்சாகமான ஆவியினால் கொடுக்கப்படும் வெகுமதிகளே அன்றி வேறு எந்தவிதத்திலும் கொடுக்கப்படும் வெகுமதிகள் கொடுக்கப்படாமலே இருக்கலாம், ஏனெனில், அவைகள் குறைவானதையோ அல்லது யாதொரு ஆசீர்வாதத்தையுமே

கொண்டு வராது. இப்படியாக கொடுக்கப்படுவதை, தேவன் பாராட்டுவதுமில்லை. அவருடைய மதிப்பீட்டின்படி அத்தகைய கொடுத்தலில் "**சுகந்த வாசனை**" இல்லை. தேவனால் பாராட்டப்பட வேண்டுமானால், அந்த வெகுமதி ஸ்தோத்திர பலியாகவும், நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் தேவனிடத்திலிருந்து இறங்கி வருகிறது என்ற உணர்வையும் நித்தியமாய் நாம் அவருக்கு கடன்பட்டவர்கள் என்ற நன்றியறிதலுள்ள மனோபாவத்தினால் தூண்டப்பட்டதாகவும் இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு "**தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்**" என்று நம்முடைய பாடத்தின் தலைப்பு வாக்கியத்தில் அப்போஸ்தலர் உறுதியளிக்கிறார். தெய்வீக ஊழியத்திற்கென யாரெல்லாம் முறையான ஆவியோடு எதையாயினும் அதாவது நேரம், தாலந்து, பெலன், பணம் அல்லது செல்வாக்கு ஆகியவைகளில் எதையாயினும் கொடுப்பவர்கள், அதற்கேற்ற வகையில் வெவ்வேறு கிருபைகளில் விகிதாச்சார அளவில் நிறைந்திருக்கிறதை காண்பார்கள்; ஏனெனில் அத்தகையவர்கள் கிருபையில் வளர இருதயத்தின் சரியான மனப்பான்மையில் இருக்கிறார்கள்.

அப்படிப்பட்டோர் "**எல்லாவற்றிலும் சம்பூரணமுடையவர்களாயும்**" அதுமட்டுமின்றி "**சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயும்**" இருப்பார்கள் என்பதாக பரிசுத்த பவுல் குறிப்பிடுவதாகத் தெரிகிறது. சம்பூரணம் என்பது ஆடம்பரத்தையும், வாழ்க்கைக்கான எல்லா சௌகரியங்களையும் குறிப்பதல்ல; ஆயினும் "**எல்லா சம்பூரணமும்**" எப்போதும், "**போதும் என்கிற மனதுடன் கூடிய தேவ பக்தி**" இருக்கும் இடத்தில் பெறப்படுகிறது. தங்களுக்கு வரும் ஆசீர்வாதத்தில் ஒரு பகுதியை அது உலகத்துக்குரியதோ அல்லது ஆவிக்குரியதோ அதில் ஒரு பகுதியை வாரியிறைக்க விரும்புவோரின் மீது இருக்கும் தெய்வீக அக்கறை பற்றி அப்போஸ்தலன் யாதொரு புதிய கோட்பாட்டையும் கொடுக்கவில்லை என்பதற்கு ஆதாரமாக சங்கீதம் 112-ஐ மேற்கோள் காட்டுகிறார்.

பரி.பவுல் 2 கொரி. 9:11-ல் "**எவ்விதத்திலும் சம்பூரணமுள்ளவர்களாவீர்கள்**" என்பதைப் பற்றி பேசுகிறதினால், கர்த்தருடைய ஜனங்கள் எல்லோரும் பொருளாதார ரீதியில் சம்பூரணராய் இருப்பார்கள் என்று நாம் புரிந்துக் கொள்ளக் கூடாது. பொதுவாகவே, கர்த்தருடைய ஜனங்கள் ஐசுவரியவான்களாக ஆகிவிடுவதில்லை என்பதற்கு அவரே ஒரு உதாரணமாய் இருந்தார். அவர் இருதயத்தின் சம்பூரணத்தை குறித்துப் பேசுகிறார். வேறொரு இடத்தில் அவர் தன்னையும் தன் உடன்ஊழியர்களையும் குறித்து சொல்லும் போது, "**தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும் ஒன்றுமில்லாதவர்களெனப்பட்டாலும் சகலத்தையுமுடையவர்களாகவும்**" என்று கூறுகிறார். (2 கொரி. 6:10). இந்த உண்மையுள்ள தேவனுடைய ஊழியக்காரர்கள் அநேகரை நம்பிக்கையில் ஐசுவரியவான்களாக, விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், அன்பில் ஐசுவரியவான்களாகவும், இந்த குணங்கள் உணர்த்தும் பல்வேறு கிருபைகளிலும் ஐசுவரியவான்களாக்கினார்கள், அதாவது, அவர்கள் சிறந்த ஐசுவரியத்தை வழங்கினார்கள்.

## இயேசுவே நமக்கு உதாரணம்

மற்றவர்களின் நலனுக்காக, சுயத்தை முற்றிலும் வெறுப்பதற்கு ஆகச் சிறந்த உதாரணம் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஆவார். அவர், ஆவிக்குரிய இயல்புடையவராய் அதனுடைய சகல மகிமையும் கனமும் பொருந்தின ஐசுவரியவானாக இருந்தார். என்றாலும், இன்னும் நமது நிமித்தம் மனுக்குலத்தை மீட்கும்படியாக மனித இயல்பை எடுத்து தரித்திரரானார். (யோவா. 1:14; 2 கொரி. 8:9). தம்முடைய உயிரையே கல்வாரியில் ஒப்படைக்கும் அளவிற்கு சென்று தம்மைத்தாமே பலியாக செலுத்தியதின் நிமித்தம் சபையை ஐசுவரியமுள்ளதாக்கினார்; அதாவது, தெய்வீக தயவையும் கிறிஸ்துவிலுள்ள தேவ கிருபையின் ஐசுவரியத்தையும், பரலோக கனங்கள் உட்பட அவருடைய உயிர்த்தெழுதலில், உயர்த்தப்பட்ட ஆண்டவராய் தெய்வீக மாட்சிமையின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் நோக்கத்தினிமித்தம் சபையை ஐசுவரியமுள்ளதாக்கினார். ஆனால் அவருடன் இந்த கனத்தை நாம் அடையும்படிக்கு புதிய சுபாவத்தின் இயல்புடையவர்களாய் ஜெனிப்பிக்கப்பட்டவர்கள், அவரைப்போலவே இருப்பதற்கு கற்றுக்கொள்ளவும், அவருடைய ஆவியை பெற்றவர்களாய் இருப்பதும், அவர் அருளும் இம்மைக்குரிய மற்றும் ஆவிக்குரிய தயவுகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதும் அவசியமானதாகும்; அதாவது, சூழ்நிலைகள் விருப்பமுள்ள இருதயத்திற்கு கட்டளையிடுவதற்குத்தக்க, மற்றவர்களை (குறிப்பாக விசுவாச வீட்டாரை) இம்மைக்குரிய அல்லது ஆவிக்குரிய ரீதியில் போஷிப்பதும் அவர்களுக்கு உதவுவதும் அவசியமாகும்.

"**தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்!**" நம்முடைய இரட்சகராகிய நமது மீட்பரும் (யோவா. 3:16) அவர் மூலமாய் இரட்சிப்பின் வேலையும் எப்பேற்பட்ட அருங்கொடையான ஈவு! இது சம்பந்தமாக, நமக்கு அருளப்படுகிற தெய்வீக கிருபையின் ஐசுவரியத்தைப் பற்றிச் சொல்வது என்பது இயலாததாயிருக்கிறது, அதாவது நம்முடைய - ஆண்டவரின் மூலமாய் நமக்குக் கிடைத்த எண்ணிலடங்காத ஆசீர்வாதங்களையும் இரக்கங்களையும் பற்றி சொல்வது இயலாததாயிருக்கிறது. நம்முடைய நித்திய நலனுக்காக ஒவ்வொரு தெய்வீக ஏற்பாட்டின் நிறைவையும் அவர் நமக்கு பிரதிநிதித்துவப் படுத்துகிறார். அப்போஸ்தலன் சொல்வதைப்போல, "**தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருந்தது.**" (கொலோ. 2:9). இதுவரையிலும், சபை மட்டுமே இப்போது அவர் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு நன்றி செலுத்த முடியும். எனினும் நாளடைவில் முழு மனுக்குலமும் இந்த சொல்லி முடியாத ஈவை அடையாளங்கண்டு அவருக்கு நன்றி செலுத்தும் நிலையில் இருக்கும். எப்பொழுது என்றால் மேசியானிய ஆட்சியின் முடிவில் ஆதாமிய சந்ததி தங்களுடைய ஆதி பூரண நிலைக்கு திரும்பும் பொழுது,

துணிகரமான பாவிகளெல்லாரும் அழிக்கப்பட்ட பின்னர் தேவனுடைய மகிமைக்காக எல்லா முழங்கால்களும் முடங்கும், எல்லா நாவுகளும் அறிக்கையிடும். அப்பொழுது பரலோகத்திலும், பூலோகத்திலும், சமுத்திரத்திலுமுள்ள சகல சிருஷ்டிகளும் தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவாகிய தெய்வீக அன்பைக் குறித்து, "**சிங்காசனத்தில் வீற்றிருக்கிற வருக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் சதாகாலங்களிலும் துதியும், கனமும், மகிமையும் வல்லமையும் உண்டாவதாக**" என்று ஏகமாய் சொல்வதைக் கேட்கலாம்.

ஏற்கனவே பிரகாசிப்பிக்கப்பட்டு, நமது பரலோக பிதாவின் துதிகளை பாடக்கூடிய நமக்கு இது எப்பேர்ப்பட்ட சந்தோஷமாக இருக்கிறது! அவர் நமக்கு அருளிய சொல்லி முடியாத ஈவும், மற்ற வெகுமதிகளும் வீண்போகாமல் இருக்கட்டும். நாமும் அனுதினமும் நம்மை அவருடைய ஊழியத்திற்கும், மகிமைக்கும் கனத்துக்கும் ஒப்படைத்தவர்களாய் அவர் நம்மை கிருபையாய் ஆசீர்வதித்ததை போலவே மற்றவர்களுக்கும் ஆசீர்வாதங்களை கொண்டு செல்லும் பொருட்டு அன்பிலும் வைராக்கியத்திலும் நிறைந்தவர்களாயிருப்போமாக. "**இலவசமாய் பெற்றீர்கள், இலவசமாய் கொடுங்கள்**" (மத். 10:8). நம்முடைய உதாரத்துவத்தை அப்பியாசிக்கையிலும், மற்றவர்களை ஆசீர்வதிக்கையிலும் மனிதர்கள் காணும்படி, அவர்களுக்கு முன்பாக அதை பிரசித்தப்படுத்தாமலிருக்க எச்சரிக்கையாய் இருப்போமாக; இல்லையெனில், பரலோகத்தில் இருக்கிற பரமபிதாவினிடத்தில் நமக்கு எந்த வெகுமதியும் இல்லை. (மத். 6:1). "**மனுஷருக்கு பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாக பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்**" (எபே. 6:6). நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக, நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.

தேவன் நமக்கு அருளியிருக்கும் மற்றும் தொடர்ந்து அருளப்போகும் அபரிதமான கிருபையைக் குறித்து தியானிக்கையில் நாம் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாய் இருக்கும்படிக்கும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும் படியாக, நம் எல்லோருக்கும் மிகுந்த ஆசீர்வாதத்தை இந்த வருடத்தின் வேத வாக்கியமானது, நம்மனைவருக்கும் கொண்டு வருவதாக. தேவன் நமக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவாக நிறைவேற்றுவார்; நம்முடைய குணாதிசயங்களில் உதாரத்துவத்தின் கிருபையை வளர்த்து ஒவ்வொரு நற்கிரியைகளிலும் மிகுதியாக அவருக்கு ஊழியம் செய்வதில் நாம் குறுகிப்போகாமல் இருப்போமாக. "**நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.**" (யோவா. 15:8).

எங்களுடைய பாடத் தலைப்பு வாக்கியத்திற்கு ஒரு இணைப்பாடலாக, நம்முடைய Hyms of Millennial Dawn பாட்டுக்களில் உள்ள "More likeness to thee", என்ற பாடல் எண் 198-ஐ பரிந்துரைக்கிறோம். ***

# சார்லஸ் H ஸ்பர்ஜன்
## தேவனுடைய மனிதன்

சார்லஸ் ஸ்பர்ஜனை ஒரு கிறிஸ்தவராகவும் வல்லமையுள்ள தேவனுடைய மனிதராகவும் பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் மிகவும் மதித்தனர். நம்முடைய வாசகர்கள் அவருடைய வாழ்க்கை வரலாற்றின் சிலவற்றை, குறிப்பாக கிறிஸ்து இயேசுவை அவருடைய சொந்த இரட்சகராக கண்டடைந்த அனுபவத்தை விரும்பலாம்.

சார்லஸ் ஓர் கிறிஸ்தவ குடும்பத்தில் இங்கிலாந்தின், எசக்ஸ்ஸில் உள்ள கெல்வீடான், (Kelvedon, Essex) என்னுமிடத்தில் ஜூன் 19, 1834-ல் பிறந்தார். அவருடைய தகப்பனும் தாத்தாவும் சுயாதீனமாக இயங்கும் உபதேசியார்களாயிருந்தார்கள்; ஆனால் சார்லஸ் அவர்களுடைய கருத்துக்களில் திருப்தியடையவில்லை. சார்லஸ் கோல்செஸ்டரிலும், மேய்ட்ஸ்டோனிலும் (Colchestor and Maidstone) கல்வி பயின்றார். அவர் 1849-ல் நியூமார்க்கெட்டில் (Newmarket) உள்ள ஓர் பள்ளியில் நியமிக்கப்பட்ட வழிகாட்டியாக இருந்தார்; கிறிஸ்துமஸ் காலத்திற்கு தன் வீட்டிற்கு சென்றபோது, கூடுமானால், இரட்சிப்பின் வழியை கண்டறிவதற்காக அக்கம்பக்கத்திலுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவ மதக் குழுவினர்களையும் சந்திக்க அவர் தீர்மானித்தார்.

15 வயதிற்கு சற்றே மேலான விசாரித்தறிகிற விடலை பருவத்திலிருந்த சிறுவனாகிய சார்லஸ் பற்பல தேவாலயங்களுக்கு சென்றார், ஆனால் அவர் தேடிக் கொண்டிருந்ததை கண்டுபிடிக்க முடியவில்லை. உபதேசிமார்கள் கிறிஸ்தவ விசுவாசத்தின் பற்பல கொள்கைகளைப் பற்றியும் கிறிஸ்தவர்கள் மேற்கொள்ள வேண்டிய வாழ்க்கை நெறிமுறைகளை பற்றியே பிரசங்கித்தனர்; ஆனால் அந்த வாலிபருக்கு தேவையானதும் அவர் ஏங்கிகொண்டிருந்ததும் என்னவெனில் எப்படி ஓர் பாவி அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்படுதலை பெற்றுக் கொள்ளலாம் என்பதைப் பற்றிய அறிவேயாகும்.



சார்லஸ் அவருடைய தேடலில் தொடர்ந்தார், மேலும் ஆண்டவரும் அவருடைய வாக்குத்தத்தத்தின்படி (மத். 5:6; 7:7-11) அவரைக் கைவிடவில்லை, அவர் சற்றும் நினைத்திராத விதத்தில் அவருக்கு உதவினார். ஜனவரி 6-ம் தேதி 1850-ம் ஆண்டில் தன்னுடைய பெற்றோரின் வீட்டிலிருந்து சற்று தொலைவிலுள்ள ஒரு சிற்றாலயத்திற்கு போவதாக முடிவு செய்து சாலையில் நடக்கலானார். ஆனால் ஓர் பயங்கர பனிப்புயல் வந்து அவருடைய பயணத்தை தொடரவிடாமல் தடுத்தது. அவர் மற்றொரு பக்க தெருவிற்குள் திரும்பி ஒரு சிறிய பழமை வாய்ந்த மெதடிஸ்டு சிற்றாலயத்திற்குள் (Primitive Methodist Chapel) வந்தார். அவர்களுடைய சில வழக்கத்திற்கு மாறான வழிபாட்டு முறைகளைப் பற்றியும், கூட்டங்களில் அவர்கள் கூச்சலிடும் விதம் பற்றியும், இன்னும் சிலவற்றைப் பற்றியும் அவர் கேள்விப்பட்டிருந்ததினால், அவர் உள்ளே நுழைந்தபோது சாதகமாக ஈர்க்கப்படவில்லை. புயலுக்கான அடைக்கலத்திற்காகவே அவர் தஞ்சம் புகுந்து அவர்கள் எதைத்தான் சொல்லப் போகிறார்கள் என்று கேட்க தீர்மானித்தார். அதைக் குறித்ததான அவருடைய கருத்து இங்கு இருக்கிறது: "அந்த காலை வேளையில் உபதேசிக்க வேண்டியவர் வரவில்லை, அவரும் பனிப்புயலில் மாட்டிக்கொண்டார் என்று நான் நினைக்கிறேன். இறுதியில் மிகவும் மெலிந்த தோற்றமுடைய ஒரு காலணி செய்பவரோ, அல்லது ஒரு தையல் காரரோ அல்லது அதுபோலான ஏதோ ஒன்றை செய்யும் ஒருவர் பிரசங்கிப்பதற்கு பிரசங்க பீடத்தை நோக்கி சென்றார். இங்கே, போதகர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்க வேண்டியது நல்லது; ஆனால் இந்த மனிதனோ உண்மையாகவே மதிநுட்பமற்றவராக இருந்தார். அவர் தனது உரையில் உறுதியாக இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது, ஏனெனில் அவருக்கு சொல்வதற்கு வேறெதுவும் இல்லை. அந்த வேத பகுதி ஏசாயா 45:22 ஆக இருந்தது. பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கி பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள் நானே தேவன், வேறொருவரும் இல்லை." அவர் அந்த வார்த்தைகளை சரியாக கூட உச்சரிக்கவில்லை. என்றாலும் அது ஒரு விஷயமில்லை. அந்த எழுத்துக்களில் எனக்கான ஓர் நம்பிக்கையின் ஒரு ஒளிக் கீற்று இருப்பதாக நான் உணர்ந்தேன்.

உபதேசியார் இவ்வாறாக ஆரம்பித்தார்: என் அன்பு நண்பர்களே, இந்த எழுத்துக்கள் உண்மையாகவே எளிமையானவை ஆகும். அது "நோக்கி பாருங்கள்" என்றும் எந்த ஒரு பாரத்தையும் சுமக்காமல் இப்பொழுதே பாருங்கள் என்றும் சொல்கிறது. இது உங்களின் பாதத்தையோ அல்லது விரலையோ தூக்குவது அல்ல, அது வெறும் "நோக்கிப் பார்த்தல்" மட்டுமே. நல்லது, ஒரு மனிதன் நோக்கிப் பார்க்கும்படி, கற்றுக் கொள்வதற்கு கல்லூரிக்கு செல்ல வேண்டியதில்லை. நீங்கள் மாபெரும் மதிநுட்பமற்றவராக இருக்கலாம், ஆனால் நீங்கள் பார்க்க முடியும். ஒரு வருடத்திற்கு ஓர் ஆயிரம் வருவாய் பெறுகிற ஓர் மனிதனாய் இருக்க வேண்டிய அவசியமில்லை. எவரானாலும் நோக்கிப் பார்க்கலாம்; ஒரு சிறு குழந்தையும் கூட நோக்கிப்பார்க்கலாம். என்றாலும்கூட அந்த வாக்கியம் "என்னை நோக்கிப் பாருங்கள்" என்று சொல்கிறது.

"ஏய்," என பரந்த உச்சரிப்பில் இவ்வாறு கூறினார், அநேகர் உங்களையே நோக்கி பார்த்து கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அங்கு நோக்கி பார்ப்பது எவ்விதத்திலும் பயன் தராது. உங்களுக்குள்ளேயே எவ்வகையான ஆறுதலையும் நீங்கள் கண்டுகொள்ளமாட்டீர்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் பிதாவாகிய தேவனை நோக்கி பாருங்கள். "**என்னை நோக்கி பாருங்கள்**" என்று தேவன் சொல்கிறார். உங்களில் சிலர் "நாம் ஆவியின் கிரியைக்காக காத்திருக்க வேண்டும்" என்று சொல்கிறீர்கள். இப்பொழுது உங்களுக்கு அதனோடு எந்த வேலையும் இல்லை. உங்கள் இரட்சகராகிய கிறிஸ்துவின் மூலமாய் தேவனை நோக்கிப் பாருங்கள். வசனமானது "என்னை நோக்கிப்பாருங்கள்" என்று சொல்கிறது.

பின்னர் அவருடைய வசனத்தை அந்த நல்ல மனிதர் இவ்விதமாய் தொடர்ந்தார், "என்னை நோக்கிப் பாருங்கள், நான் மாபெரும் இரத்த வியர்வை துளிகளை சிந்திக் கொண்டிருக்கிறேன். என்னை நோக்கிப் பாருங்கள், நான் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கிறேன். என்னை நோக்கிப் பாருங்கள் நான் பரலோகத்துக்கு ஏறுகிறேன். என்னை நோக்கிப் பாருங்கள் நான் பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறேன். பரிதாபகரமான பாவியே, என்னை நோக்கிப் பார்! என்னை நோக்கிப்பார்!"

இவ்வளவு நீளத்திற்கு பிரசங்கம் சென்ற பிறகு, சுமார் பத்து நிமிடங்கள் இப்படி சொல்லி தனது பிரசங்கத்தை முடிக்கும் தருவாயில் அவர் இருந்தார். பிறகு அவர்

பார்வையாளர்களின் இருக்கை அமர்வின் கீழாக என்னை கவனித்தார். அங்கு சிலரே கூடியிருந்தபடியால் என்னை அவ்விடத்திற்கு அந்நியனாக இருப்பதை அவர் அறிந்து கொண்டார் என்று தைரியமாய் என்னால் சொல்ல முடியும். என் இருதயத்தில் ஓடும் அனைத்தையும் அறிந்தவர்போல தன்னுடைய கண்களை என்மீது பதித்தவராய் அவர் சொன்னார், "இளைஞனே, நீ மிகவும் பரிதாபமான நிலையில் இருக்கிறாய்." நல்லது, நான் அப்படிப்பட்ட நிலையில் தான் இருந்தேன். எனினும் பிரசங்க பீடத்திலிருந்து ஒருவர் என் தனிப்பட்ட தோற்றத்தைப் பற்றி பகிரங்கமாய் கூறுவதை கேட்பதற்கு நான் பழக்கப்படவில்லை. இருப்பினும் அது நெற்றி அடியாய் இருந்தது; அது சரியாக உட்களத்தையே தாக்கியது.

அவர் "என் வார்த்தைகளுக்கு நீ கீழ்ப்படியவில்லையென்றால் நீ எப்பொழுதும் மோசமான நிலையிலேயே இருப்பாய் - வாழ்விலும் மோசமான நிலை சாவிலும் மோசமான நிலையிலேயே இருப்பாய். - ஆனால் இப்பொழுது நீ இந்த வேதப்பகுதிக்கு கீழ்ப்படிந்தால் இந்த கணப்பொழுதிலேயே இரட்சிக்கப்படுவாய்" என்று தொடர்ந்தார் பழைய மெத்தடிஸ்டு உபதேசியாருக்கான பிரத்தியேகமான பாங்கில் அவருடைய கரங்களை உயர்த்தி, இளைஞனே! இயேசு கிறிஸ்துவை நோக்கிப்பார். நோக்கிப்பார்! நோக்கிப்பார்! நோக்கிப்பார்! இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பார்த்து ஜீவனை பெறுவதைவிட உனக்கு செய்வதற்கு வேறெதுவும் இல்லை என்றார்.

இரட்சிக்கப்படுவதற்கான வழியை நான் அந்த நொடியே கண்டேன். அதற்குமேல் அவர் என்ன சொன்னார் என்பதை நான் அறியேன் - அதனை குறித்து அதிக கவனத்தை எடுத்துக்கொள்ளவில்லை. அந்த ஒரே எண்ணத்துடன் நான் ஆட்கொள்ளப்பட்டிருந்தேன். வெண்கல சர்ப்பத்தை உயர்த்திய போது மக்கள் அதை நோக்கி பார்த்து குணமடைந்ததுபோல அது எனக்கும் இருந்தது. நான் ஐம்பதுக்கும் மேற்பட்ட காரியங்களைச் செய்வதற்கு காத்திருந்தேன், ஆனால் நோக்கிப்பார் என்ற அவ்வார்த்தையை கேட்டபோது அது எனக்கு அவ்வளவு அழகாய் தோன்றியது. ஓ! என் கண்கள் சிமிட்டும் வரை நான் நோக்கிப் பார்த்துக்கொண்டே இருந்தேன். அங்கே, அப்பொழுதே என்னைச் சூழ்ந்திருந்த மேகம் மறைந்தது, இருள் அகன்றது அந்த தருணத்தில் நான் சூரியனை பார்த்தேன்; அந்தத் தருணமே நான் எழுந்திருந்து அங்குள்ள உற்சாகமுடையவர்களோடு இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தைப் பற்றியும் அவரை மட்டுமே நோக்கிப் பார்க்கும் எளிய விசுவாசத்தைப் பற்றியும் நான் சேர்ந்து பாடியிருக்க முடியும்.

நான் இரட்சகரை கண்ட மகிழ்ச்சியான நாளிலே அவருடைய அருமையான பாதத்தை பற்றி பிடித்துக் கொள்ள கற்றுக்கொண்ட அந்த நாளை என்னால் மறக்க முடியாது. ஒரு தெளிவற்ற குழந்தையானவனும், அறியாதவனும், கேள்விப்படாதவனுமாகிய நான் தேவனுடைய வார்த்தையைக் கவனித்தேன்; அந்த விலையேறப்பெற்ற வசனம் என்னை கிறிஸ்துவின் சிலுவையின் அண்டைக்கு வழி நடத்தியது. அந்த நாளின் சந்தோஷத்தை முற்றிலும் விவரிக்கவே இயலாது என்று என்னால் சாட்சியளிக்க முடியும். நான் குதித்திருக்கலாம்; நான் நடனமாடியிருக்கலாம், எனினும் யாதொரு பாவனையும் செய்யவில்லை, அது எவ்வளவு உணர்ச்சியார்வம் மிகுந்ததாக இருந்தாலும், அந்நேரத்தில் என்னுடைய ஆவியின் களிகூர்தலுக்கு அது பொருத்தமாகவேயிருந்திருக்கும்.

அதற்கு பிறகு கிறிஸ்தவ அனுபவத்தில் எத்தனையோ நாட்கள் கழிந்துவிட்டன, ஆயினும் என்னை முழுவதும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியதும், ஒளிமயமாக்கி களிகூரச் செய்ததுமான அந்த முதல் நாளைப்போல வேறெந்த நாளிலும் ஒருபோதும் இருந்ததில்லை. நான் அமர்ந்திருந்த இருக்கையிலிருந்து குதித்து எழும்பி, அங்கிருந்த வலிமையான மெத்தடிஸ்டு சகோதரர்களுடன் சேர்ந்து, நான் மன்னிப்பை பெற்றேன்! நான் மன்னிப்பை பெற்றேன்! கிருபையின் அடையாள சின்னம்! இரத்தத்தினால் இரட்சிக்கப்பட்ட பாவி நான், என்று ஆர்ப்பரித்திருக்க முடியும் என்று எண்ணினேன்.

நான் ஓர் விடுவிக்கப்பட்ட ஆத்துமாவைப்போல, பரலோகத்தின் சுதந்தரவாளியாக, மன்னிப்பை பெற்ற ஒருவனாக கிறிஸ்து இயேசுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டவனாக, உளையான சேற்றிலிருந்தும் பயங்கரமான குழியிலிருந்தும் தூக்கியெடுக்கப்பட்டவனாக, என் பாதங்கள் கற்பாறையின் மேல் நிறுத்தப்பட்டு என்னுடைய செயல்களை அவர் நிலைவரப்படுத்தினதாக உணர்ந்தேன், நான் என் வீடு வரை நடனமாடினவனாய் வந்திருக்கலாம் என்று எண்ணினேன். ஜான் புன்யன் "நான் உழுத நிலத்திலிருந்த காகங்களுக்கும் கூட என்னுடைய மனமாற்றத்தைக் குறித்து சொல்ல வேண்டியது போல் இருந்தது" என்று அறிவித்த போது அர்த்தப்படுத்தியதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

## ஸ்பர்ஜன் தன்னுடைய ஜீவியத்தை தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்தல்

தன்னுடைய இரட்சகராகிய கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தின் மூலமாய் தேவனோடு சமாதானத்தை கண்டடைந்தார். (ரோம. 5:1; 8:1). ஸ்பர்ஜன் ரோம. 12:1-ல் கூறப்பட்டுள்ள புத்திமதிக்கு இணங்க தன்னுடைய வாழ்க்கையை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து கேம்பிரிட்ஜ் மற்றும் அதின் சுற்று வட்டார பகுதியில் கருத்தாய் மதம்சார்ந்த பணியில் ஈடுபட்டிருந்தார். வேத வாக்கியங்களைப் பற்றிய அவருடைய ஆய்வானது அவரை தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறும்படி செய்தது.

விரைவிலேயே அவர் சுற்றுவட்டாரங்களில் "சிறுவயது பிரசங்கி" என்றழைக்கப்பட்டார். தன்னுடைய பதினெட்டாம் வயதில் வாட்டர்பீச்சிலுள்ள பாப்டிஸ்டு சபையின் போதகரானார். அவருடைய சொற்பொழிவுக்காக அறியப்பட்டவ-

ரான இவர் 1854-ல் சவுத்வார்க்கிலுள்ள (Southwark) பாப்டிஸ்டு சிற்றாலயத்தின் ஆயர்பதவிக்கு அழைப்பினைப் பெற்றார். ஆனால் அது அவருடைய பிரசங்கத்தைக் கவனிக்கும் கூட்டத்தாருக்கு மிகவும் சிறியதாக மாறியது, மேலும் அவருடைய சபை எக்ஸ்டர் ஹாலுக்கும் (ExeterHall) சேரே மியூசிக் ஹாலுக்கும் (Surrey Music Hall) அடுத்தடுத்து மாற்றப்பட்டது, முடிவாக 1861-ம் ஆண்டு 6000 மக்கள் உட்காரக்கூடிய மாபெரும் பெருநகர கூடாரம் என்னும் கட்டிடம் (The great metropolitan Tabernacle) கட்டப்பட்டது. இங்கு அவர் தன்னுடைய எஞ்சிய வாழ்க்கை முழுவதும் பிரசங்கம் செய்து பிரயாசப்பட்டு வந்தார். அவருடைய பிரசங்கங்கள் கேட்போரை உலகின் பல்வேறு பாகங்களி-லிருந்து கவர்ந்திழுத்தது.

அவருடைய சாதாரண ஊழியங்கள் மற்றும், 1855-யிலிருந்து அவருடைய வாராந்திர பிரசங்கங்கள் பிரசுரிக்கப்-படுவது தவிர, ஸ்பர்ஜன் அவர்கள், போதகர்களுக்கான கல்லூரி (அங்குதான் லண்டன் மாநகரத்தின் 36 சிற்றாலய போதகர்கள் அவரால் பயிற்றுவிக்கப்பட்டனர்) ஸ்டாக்வெல் அனாதை இல்லம், தர்மசாலைகள், பள்ளிகள் முதலிய-வற்றை நிறுவினார். ஆர்வம், எளிமை, நேரிடையான கருத்து, உயிரோட்டமான தன்மை மற்றும் அடிக்கடி உண்மைத்தன்மையுடனான நகைச்சுவை உணர்வும் அவருடைய பிரசங்கங்களின் பிரதானமான குணவிசேடங்-களாய் இருந்தன. ஞானம், பொது அறிவு, நடைமுறைத் திறன், வெளிப்படையானத் தன்மை, சாதூர்யம் மற்றும் அனுதாபத்துடனான புரிந்து கொள்ளுதல், போலியான பாசாங்குகள் மற்றும் பொய்மை மீதான வெறுப்பு போன்றவைகள் ஒரு கிறிஸ்தவராக அவருடைய குணத்தை அடையாளப்படுத்தின.

ஸ்பர்ஜன் ஒரு ஆக்கப்பூர்வமான எழுத்தாளராக இருந்தார். அவருடைய சிறந்த புத்தக தொகுப்புகளாக, பரிசுத்தவானும் அவரது இரட்சகரும் (The saint and his saviour) (1867), ஜான் பிலௌமேனின் உரை (John Ploughman's Talk) (1868), அம்புகளுக்கான இறகுகள் (Feathers for Arrows) (1870), தாவீதின் கருவூலம், (The Treasury of David) - சங்கீதங்களுக்கான விளக்கவுரை அதாவது, ஏழு தொகுதிப்பிரிவுகளை கொண்ட விளக்கவுரை (1865-80), அடையாளங்கள் மற்றும் குறியீடுகள் (Types and Emblems) (1875), பெருநகரக் கூடாரம் மற்றும் அதனுடைய வேலை (The Metropolitan Tabernacle and its work) (1876), பண்ணை சொற்பொழிவுகள் (Farm Sermons) (1882), நிகழ்கால சத்தியம் (The present Truth) (1883)., புயலின் சமிக்ஞைகள் (Storm Signals) (1886), உப்பு நிலவறைகள் (Salt Cellars) (1889) மற்றும் அவருடைய மனைவியால் தொகுக்கப்பட்டு அவரால் எழுதப்பட்ட அவருடைய சுயசரிதை நூல் (1900). போன்றவைகள் அறியப்படுகின்றன. அவருடைய மாதாந்திர பத்திரிக்கை வாளும் கொல்லறுவும் (The Sword and the trowel) என்று அழைக்கப்பட்டது. அவர் ஜனவரி மாதம் 1892-ம் ஆண்டு 21-ம் நாள் 58 வயதிற்கும் குறைவான வயதில் மரித்தார். அவருடைய வாழ்க்கை-யானது கர்த்தருக்கும் சுவிசேஷ ஊழியத்துக்கும் மிகவும் பலனுள்ளதாக இருந்தது.

## ஸ்பர்ஜன் பாபிலோனை விட்டு வெளியே வந்தார்

ஸ்பர்ஜன் வலிமையான கொள்கைகளையுடைய மனிதராவார். அவர் கண்ட சத்தியத்திற்காக உறுதியாக நின்றார். இதன் விளைவாக அவருடைய பிற்காலங்களில் பாப்டிஸ்டு யூனியனில் தப்பறைகளும் வீழ்ச்சியடைந்த நிலையும் காணப்பட தொடங்கி தேவனுடைய வார்த்தை-யிலுள்ள சத்தியத்தை விட்டு குழப்பங்களை ஏற்படுத்துகிற-வர்களாய் மாறினபடியால் அவர் ஆண்டவரின் அழைப்பைக் கேட்டு (வெளி. 18:4) "**என் ஜனங்களே.... அவளை விட்டு வெளியே வாருங்கள்.**" என்பதற்கு கீழ்படிந்து 1887-ல் வெளியேறினார்.

## ஸ்பர்ஜனுடைய எழுத்துக்களிலிருந்து தனி மேற்கோள்களாக எடுத்துக்காட்டப்பட்டவைகள்

எத்தனைபேர்கள் என்று எண்ணுவதை நான் நீண்ட காலத்திற்கு முன்பே நிறுத்திவிட்டேன். இந்த பொல்லாத உலகில் சத்தியம் என்பது பொதுவாக சிறுபான்மை-யினரிடமே காணப்படுகிறது. எனக்காக கர்த்தராகிய இயேசுவின்மேல் நான் விசுவாசம் வைத்திருக்கிறேன், உருக்கப்பட்ட இரும்பைப் போன்ற விசுவாசம் எனக்குள் கொளுந்துவிட்டு எரிகிறது. நான் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன், நான் நம்புவதை நான் ஒருவன் மட்டுமே நம்புவதாக இருப்பினும்கூட நான் நம்புவதை தொடர்ந்து நம்புவேன். வேதாகமத்தை நம்பும் மனிதர்களுக்கும், வேதாகமத்தின் அடிப்படையில் முன்னோக்கி செல்ல ஆயத்தமாகும் மனிதர்களுக்கும் இடையே ஆழமான பெரும் பிளவு திறந்து கொண்டிருக்கிறது. வீடு கொள்ளை-யிடப்படுகிறது, அதினுடைய சுவர்கள் இடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது, ஆனால் தங்கள் படுக்கையிலுள்ள நல்ல ஜனங்கள் அது அளிக்கும் வெதுவெதுப்பான அரவணைப்பை விரும்புகிறவர்களாய் (மதக் கொள்கை-யாகிய படுக்கைகள் - ஏசாயா 28:20 அர்மெகதோன் யுத்தம் (The Battle of Armagedon), பக்கம் 608 பார்க்கவும் - பதிப்பாசிரியர்) தங்கள் தலைகள் உடைந்துவிடுமோ என்று பயப்படுகிறவர்களாய், கீழ்தளத்திற்கு சென்று கன்னமிட்டு திருடுபவர்களை சந்திக்கின்றனர். ஆவியின் தூண்டுதலும் ஊகமும் வெகுகாலம் சமாதானத்துடன் ஒன்றிசைந்து வாழ இயலாது. சமரசம் என்ற பேச்சுக்கே அங்கே இடமில்லை. நாம் தேவ ஆவியினால் ஏவப்பட்ட தேவ வார்த்தையை பிடித்துக் கொண்டவர்களாய் அதை நிராகரிக்க முடியாது; நாம் ஒப்புரவாக்குதலில் நம்பிக் கொண்டிருந்தால் அதை மறுதலிக்க முடியாது; வீழ்ச்சியின் கொள்கையை பிடித்துக் கொண்டு ஆவிக்குரிய ஜீவன் மனித இயல்பிலிருந்து

உருவானது என்று பேசிக் கொண்டிருக்க முடியாது; தண்டனையை உணர்ந்து வருந்திவிட்டு 'பெரிய நம்பிக்கையை' அனுபவிக்க முடியாது. ஏதேனும் ஒரு வழியில் கண்டிப்பாக நாம் சென்றாக வேண்டும். முடிவெடுப்பது காலத்தின் சரியான காரியமாயிருக்கிறது.

கிறிஸ்துவினுடைய ஒப்புரவாக்குதலின் மீது நம்பிக்கையுள்ளவர்கள் தற்போது அதை பெரிதுபடுத்தாதவர்களுடன் வெளிப்படையாகவே ஐக்கியப்பட்டிருக்கிறார்கள்; பரிசுத்த வேதாகமத்தை நம்புகிறவர்கள் முழுமையான ஆவியினால் ஏவப்படுதலை மறுக்கிறவர்களின் கூட்டமைப்பில் உள்ளனர்; சுவிசேஷ கொள்கையை உடையவர்கள் ஏதேனில் ஏற்பட்ட வீழ்ச்சியை கட்டுகதை என்றும்... விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலை ஒழுக்கங்கெட்டது என்றும் கூறுபவர்களுடன் கூட்டு ஒப்பந்தம் செய்துள்ளனர். ஆம், விசுவாசத்தை மறுப்பவர்களுடன் தங்கள் ஒற்றுமையை பகிரங்கமாக வெளிப்படுத்தும் பழமைவாத கிறிஸ்தவர்களின் மோசமான காட்சி நமக்கு முன்பாக இருக்கிறது, மேலும் கிறிஸ்துவுக்கு மொத்தமாக இத்தகைய விசுவாச உண்மைத்துவமில்லாதவர்களாக குற்றவாளியாக ஆகாதவர்கள் மீதான தங்களுடைய வெறுப்பை மறைக்க இயலவில்லை. மிகவும் எளிமையாக சொல்ல வேண்டுமானால் இப்படிப்பட்டவைகளை கிறிஸ்தவ அமைப்புகள் என்று நாம் அழைக்க முடியவில்லை, அவைகள் தீமையின் சதிக்கூட்டங்களாக தோற்றமளிக்கின்றன..... உண்மையான ஆவிக்குரிய ஒற்றுமை இருக்க முடியாத இடத்தில், கூட்டுறவு குறித்ததான பாசாங்கு இருக்க முடியாது என்பது எங்களின் உறுதியான நம்பிக்கை. தெரிந்த மற்றும் முக்கியமானதுமான தவறுடன் ஐக்கியம் கொள்ளுதல் என்பது பாவத்தில் பங்கு பெறுவதாகும்.

இதுவரைக்கும் பாப்டிஸ்ட் அமைப்பில் உள்ள நம்முடைய மரியாதைக்குரிய நண்பர்கள் பலர், சத்தியத்திலிருந்து தீவிரமான மாறுபாடுகளுக்கு கண்களை அடைத்துக் கொண்டது எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. அவர்களுடைய நோக்கம் பாராட்டத்தக்கதான அளவிலானது என்பதில் ஐயமில்லை, ஏனெனில் அவர்கள் சமாதானத்தை நிலைநாட்ட விரும்பினார்கள், தங்களுடைய நண்பர்கள் வயதிலும் அறிவிலும் முன்னேறியபோது, அவர்கள் பார்ப்பதற்கு நேரிட்ட பல தப்பிதங்கள் அகற்றப்படும் என்று நம்பினார்கள். ஆயினும் குறைந்தபட்சம் இவர்களாவது, புதிய கருத்துக்கள் என்பவை சிறந்த உடையில் உள்ள பழைய சத்தியம் அல்ல என்பதையும், அவைகள் ஐக்கியம் கொள்ள இயலாத கேடு விளைவிக்கக் கூடிய கொடிதான தப்பறைகள் என்பதையும் கண்டறிவார்கள் என்று நான் நம்புகிறேன். முழுவளர்ச்சியடைந்த "நவீன சிந்தனையை" நான் முற்றிலும் ஒரு புதிய வழிபாட்டுமுறையாக கருதுகிறேன், எப்படி மாலையின் பனியும் நித்திய மலைகளும் தொடர்பு அற்றவையோ அவ்வாறே இதற்கும் கிறிஸ்தவத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அவருடைய தேவ ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தையின் மூலமாக தவறாத நிலையுடைய போதகராக நாம் முன்நிறுத்த வேண்டும். அவருடைய வார்த்தைக்கு உடன்படாமல் கிறிஸ்துவுக்கு உத்தமமாய் இருப்பதை என்னால் புரிந்து கொள்ள இயலவில்லை. அவருடைய சொந்த வார்த்தைக்கும் அவருடைய அப்போஸ்தலர்களின் வார்த்தைக்கும் மதிப்பு செலுத்தப்படாவிட்டால், நாம் எப்படி ஒரு நபராக அவரிடம் பயபக்தியுடன் இருக்கக்கூடும்? கிறிஸ்துவின் வார்த்தைகளை நாம் ஏற்றுக் கொள்ளாவிட்டால், நம்மால் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள முடியாது. யோவான் கூறுகிறார்: தேவனை அறிந்தவன் எங்களுக்குச் செவிக்கொடுக்கிறான்; தேவனால் உண்டாயிராதவன் எங்களுக்கு செவி கொடுக்கிறதில்லை; இதினாலே சத்திய ஆவி இன்னதென்றும் வஞ்சக ஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோம். (1 யோவா. 4:6)

"ஒரு முக்கியமான தருணத்தின் தோல்வியானது, ஒரு வாழ்க்கையின் முழு முடிவையும் பாதிக்கக்கூடும். விசேஷித்த ஒளியை அனுபவித்த ஒரு மனிதன் ஆண்டவரின் வழியில் தொடர்ந்து செல்ல தைரியமடைந்து, அதில் மற்றவர்களை வழிநடத்த அபிஷேகிக்கப்படுகிறான். அவன் தேவ பக்தியுள்ளோர்களின் மத்தியில் அன்பு மற்றும் மரியாதையின் இடத்திற்கு உயர்கிறான், இது மனிதர்களின் மத்தியில் அவனுடைய முன்னேற்றத்தை மேம்படுத்துகிறது. அதன் பிறகு என்ன? அவன் தான் அடைந்த ஸ்தானத்தை கருத்தாய் காத்துக் கொண்டு அதற்கு இடறலுண்டாக்காதபடி எதுவும் செய்யாமல் இருக்க சோதனை வருகிறது. சமீப நாட்களில், உண்மையுள்ள தேவ மனிதனாயிருக்கிற ஒருவன், உலகத்தோடு சமரசம் செய்து, தன்னுடைய சொந்த மனசாட்சியை அமைதிப்படுத்துவதற்காக ஒரு கோட்பாட்டை உருவாக்குகிறான், அதன் மூலமாக அத்தகைய சமரசங்களை நியாயப்படுத்தப்படுகிறான், பாராட்டவும் செய்கிறான். விவேகமுள்ளவர்களின் பாராட்டையும் பெறுகிறான்; ஆனால் மெய்யாகவே சத்தியத்தில் அவன் எதிரியிடம் சென்றுவிட்டான். அவனுடைய முந்தைய வாழ்வின் முழு உத்வேகமும் தற்பொழுது தவறானதை பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. ...இப்படியொரு முடிவை தவிர்ப்பதற்கு நாம் எப்பொழுதும் உறுதியாக நிற்கிறவர்களாய் இருக்க வேண்டும்.

"ஆ! என் அன்பிற்குரிய சகோதரர்களே! இப்படிப்பட்ட பகுத்தறிவு முறையால் ஏமாற்றப்படுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள், அவர்கள் எங்கே இருக்கக்கூடாது என்று அவர்கள் மனசாட்சி விரும்புகிறதோ அங்கே தான் அவர்கள் காணப்படுகிறார்கள். ஏனெனில் அவர்கள் 'பாளயத்துக்கு வெளியே' சென்றால் இதைக்காட்டிலும் மிகவும் பயனுள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். இது நன்மை வரவேண்டி, பிரகாசிப்பிக்கப்பட்ட ஓர் மனசாட்சியால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாத தீமையை செய்வதாகும். ஒரு பாவத்தின் செயலானது என் பயனை பத்து மடங்கு அதிகரிக்கச் செய்யும் என்றாலும் அதனை செய்வதற்கு எனக்கு உரிமை இல்லை; எனினும் என்னுடைய பயனுள்ள நிலையை முற்றிலும் நாசமடைய செய்யக்கூடிய ஒரு நீதியுள்ள நற்செயல் இருக்குமாயின்

நான் அதை செய்தேயாக வேண்டும். வானங்கள் இடிந்து விழுந்தாலும் சரியானதை செய்வதும், விளைவுகள் என்னவாக இருந்தாலும், கிறிஸ்துவின் கட்டளைகளை பின்பற்றுவதே உங்கள் மேலும் என் மேலும் விழுந்த கடமையாகும். அதுவே பலமான ஆகாரம் என்று நீங்கள் சொல்கிறீர்களா? அப்படியென்றால், பலமுள்ளவர்களாயிருந்து அதையே உணவாக உட்கொள்ளுங்கள்.

தவறான நிலைகளிலிருந்து ஜனங்கள் வெளியே வருவதற்கும், சரியானதை செய்ய வேண்டும் என்று வற்புறுத்தப்படும்பொழுதான, இந்த தர்க்கத்தை பல நூறு முறைகள் நான் கேட்டிருக்கிறேன். எனினும் சத்தியத்தை பலியிட்டு நமது செல்வாக்கையும் அந்தஸ்தையும் காப்பாற்றிக் கொள்வதினால் உங்களுக்கும் எனக்கும் கிடைப்பது என்ன? சாத்தியமான மாபெரும் நன்மையை பெறுவதற்காக, ஒரு சிறிய தவறை செய்தல் என்பது ஒருபோதும் சரியானதல்ல..... சரியானதை செய்வதே உங்கள் கடமையாயிருக்கிறது: விளைவுகள் தேவனிடத்தில் இருக்கிறது.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்காத உபதேசிமார்களுடன் கிறிஸ்தவர்கள் தொடர்பு வைத்துக் கொள்வது தார்மீக குற்றத்திற்கு ஆளாவதாகும். ஒரு ஐக்கியமானது அதின் அங்கத்தினரான சபைகள் பொதுவான விசுவாசம் அற்றவர்களாய் இருந்தபோதும் தொடர்ந்து செயல்படுவதினால் வேதாகமத்தின் யாதொரு செயல்பாட்டையும் நிறைவேற்றுவதில்லை. மதக்கருத்துவேறுபாடுள்ளவர்களை ஒழுங்குபடுத்துவதற்கு திராணி இல்லாதபோது ஒரு மதப்பிரிவின் கூட்டமைப்பை பாதுகாப்பது, கிறிஸ்தவ ஒற்றுமையை பாதுகாப்பதன் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட முடியாது. தப்பறைகளே சபைகளின் ஒற்றுமைகளை உடைக்கின்றன, தப்பறைகளை கண்டு கொள்ளாத சபைப்பிரிவில் இருப்பது அந்த தப்பறைகளை ஆதரிப்பதாகும்.

“அஸ்திபாரமேயில்லாத வீட்டை சரிசெய்ய நினைப்பவர்கள் அதை முற்றிலுமாக விட்டுவிடுவதின் ஞானத்தை காணும் நாள் வரும். கேள்விக்குரிய கோட்பாடுகளுடன் இணைந்திருப்பதிலிருந்து வெளிவருவது மட்டுமே ஒரு சிக்கலுக்கு ஒரே சாத்தியமான தீர்வு என்பதை நாம் கண்டிருக்கிறோம்; எவ்வளவுதான் அது மறுக்கப்பட்டாலும், அதன் பயங்கரமான யதார்த்தத்தை அறிந்தவர்களால் அதை அற்பமாக கருத முடியாது.”

“அடிப்படை தப்பறைக்கு உடந்தையாக இருப்பவர்களிடமிருந்து பிரிந்திருப்பது, அல்லது “ஜீவ அப்பத்தை” அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்களுக்கு கொடாமல் வைத்திருப்பது பிரிவினைவாதம் அல்ல, ஆனால் எது சத்தியம் மற்றும் மனசாட்சி என்பதேயாகும். விசுவாச உண்மைத்துவம் உள்ள அனைவர்களிடத்திலும் தேவன் இதனை எதிர்பார்க்கிறார்.

“எங்களுடைய திடமான நம்பிக்கை என்னவென்றால் பல சபைகளின் நிலைமை அவர்களிடம் காண்பதைவிடவும் மிக மோசமாக உள்ளது, மேலும் அவைகள் விரைவாக கீழ்நோக்கியே செல்கின்றன. ‘பரந்த அபிப்ராய பேதப் பள்ளியை’ பிரதிநிதித்துவப்படுத்தும் செய்தித் தாள்களை படித்து, அவைகள் இன்னும் எவ்வளவு தூரம் செல்ல முடியும் என்று உங்களை நீங்களே கேள்வி கேட்டுக் கொள்ளுங்கள். எந்த கொள்கை இன்னும் கைவிடப்பட மீதம் இருக்கிறது? வேறு எந்த சத்தியம் புறக்கணிப்பிற்கான பொருளாயிருக்கும்? ஒரு புதிய மதப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது, பாலாடைக் கட்டியிலிருந்து வேறுபடுகிற சுண்ணாம்புக்கட்டியைப் போன்று, அது கிறிஸ்தவம் அல்ல, இந்த மதம், தார்மீக நேர்மையை இழந்து சிறிய முன்னேற்றங்களுடன் பழைய நம்பிக்கையாக தன்னை உள்ளங்கையில் வைக்கிறது.

“ஒப்புரவாகுதல் வெறுத்தொதுக்கப்படுகிறது, வேதாகமம் அளிக்கும் மன எழுச்சி ஏளனம் பண்ணப்படுகிறது. ....பாவத்திற்கான தண்டனை கட்டுக்கதையாகவும் மாற்றப்படுகிறது, உயிர்த்தெழுதல் புராணக்கதையாக்கப்படுகிறது, எனினும் நம்முடைய விசுவாசத்தின் இந்த எதிரிகளானவர்கள், நாம் அவர்களை சகோதரர்கள் என்று அழைக்க அவர்களுடன் ஒரு கூட்டமைப்பை பராமரிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்.”

“ஒரு விஷயம் நமக்கு தெளிவாக இருக்கிறது, நாம் மிகவும் நேசிக்கும் அடிப்படையான போதனைகளுக்கு முற்றிலும் எதிரிடையான போதகத்தை கொண்டவர்களை புரிந்து கொள்ளும் எந்த ஐக்கியத்தையும் நாம் சந்தித்து அவர்களுக்கு சார்ந்து காணப்படுவோம் என்று எதிர்பார்க்க முடியாது. என்ன விலையானாலும் தேவனுடைய சத்தியத்திலிருந்து தங்களை பிரித்து கொண்டவர்களிடமிருந்து நம்மை பிரித்துக் கொள்வது என்பது நம்முடைய சுதந்திரம் மட்டும் அல்ல, நமது கடமையுமாகும்.”

“அந்த தப்பறை உறுதியாக நிலைநாட்டப்பட்டுவிட்டது என்று நான் பார்த்தவுடனேயே அல்லது நான் நினைத்துக் கொண்டவுடனேயே, நான் யோசிக்காமல் உடனடியாக அந்த அமைப்பிலிருந்து வெளியேறி விட்டேன். அதுமுதல் என்னுடைய ஆலோசனை என்னவெனில், “**நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு பிரிந்து போய்,**” (2 கொரி. 6:17) இருங்கள்” என்பதாக இருந்தது. எவ்விதமான எதிர்ப்பும் பிரிந்திருப்பதற்கு இணையாகாது என்று நான் உணர்ந்தேன்.”

## சபைப்பிரிவுகள் அவசியமற்றவை

பாபிலோனின் தனது பகுதியை விட்டு அவர் (ஸ்பர்ஜன்) வெளியே வரும்போது, நாங்கள் உடனடியாக பாப்டிஸ்டு யூனியனிலிருந்து விலகுகிறோம் என்று தெளிவாக கூறினார். அவர் புதியதொரு சபைப்பிரிவுக்கு தலைமை தாங்க முயற்சிப்பாரா என்ற கேள்விக்கு, “இல்லை,” என்று கூறினதோடு, சுதந்திரமாய் இயங்கும் சபைகளுக்கு பிரிவுகள் அவசியமற்றவை என்றும் பதிலளித்தார். இந்த பதிலை நாம் மனதார ஏற்றுக் கொள்கிறோம். ஜனங்கள் மதப்பிரிவுகளில் சார்ந்திருப்பதை கொண்டு இரட்சிக்கப்படுவதில்லை, ஆனால் தனிப்பட்டவர்களாகவே இரட்சிக்கப்படுகின்றனர். இருண்ட யுகங்களி–

லிருந்து சுதந்தரிக்கப்பட்ட கொள்கைகளையுடைய சபைப் பிரிவு அமைப்புகள் பல்வேறு விதங்களில் தேவனுடைய உண்மையான போதனைகளை எதிர்மறையாக்கி, கிறிஸ்தவ சகோதரர்களிடையே பிளவுகளை ஏற்படுத்தி-யுள்ளன. மார்க்கபேத வேலிகளை பொருட்படுத்தாமல், கிறிஸ்துவின் மெய்யான சீடர்கள் அவரை பின்பற்றும் மற்ற கிறிஸ்துவின் மெய்யான சீடர்களுடன் ஐக்கியம் கொள்ளு-வதில் மகிழ்ச்சியடைய வேண்டும்.

"**சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்.... மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனை பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரண புருஷராகும் வரைக்கும்,... நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷ-ருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிப்பட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தை கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றி-லேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படி செய்தார்.**" (எபே. 4:3,11,14-15).

ஸ்பர்ஜன் பாபிலோனிலிருந்து வெளியேறின பிறகு அவர் மிகுந்த துன்புறுத்தலை அனுபவித்தார். எனினும் அவர் சத்தியத்துக்கும் நீதிக்கும் உறுதியாக நின்றபடியால் மறுபடியும் அவர் பாப்டிஸ்ட் யூனியனுக்குள் திரும்பவும் செல்லவில்லை. நல்ல மேய்ப்பனின் சத்தத்தை நாமும் கேட்டு அவரை பின்பற்றுவோமானால் நமக்கும் இத்தகைய அனுபவங்கள் ஏற்படும். (யோவா. 10:4,5). "**அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.**" (2 தீமோ. 3:12). "**நீங்கள் சந்தோஷப்-பட்டு களிகூருங்கள், பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதி-யாயிருக்கும்.**" "**கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்.... ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவி உங்கள்மேல் தங்கியிருக்கிறது, உங்களாலே அவர் மகிமைப்படுகிறார்.**" ***

# அர்மகெதோன் யுத்தம்

## The Battle of Armegadon

முதலாம் உலகப் போரிலிருந்து இன்று வரைக்கும் நடந்த போர்கள் நாடுகளை மிகவும் பலவீனப்-படுத்தியுள்ளன, சோசியலிச கருத்துக்களை முன்னோக்கி கொண்டுவர முயற்சிகள் நடந்துள்ளன. இது, சில சில அரசாங்கங்களினாலும், "**இப்பொழுது இருக்கிற உலகத்தை**" காத்துக்கொள்வதில் அக்கறையுள்ள எல்லா வகுப்பினர்-களாலும் எதிர்ப்பினை எதிர்கொண்டது. இப்போதைய சமூதாயம் செல்வந்தர்களாலும், நிதியாளர்களாலும், தொழில்துறைத் தலைவர்களாலும், தேசங்களின் ஆட்சி-யாளர்களாலும் ஆதரிக்கப்படுகிறது. இவர்கள் உலகத்தின் மதத்தலைவர்களை தங்களுடைய ஆதரவுக்கு வரவழைப்-பார்கள். அதன்பிறகு ஒரு பொதுவான எதிர்ப்பு வரக்கூடும், ஒரு பக்கம் தற்போதைய ஏற்பாடுகளினால் பயனடைகிறவர்-களும், எந்த மாற்றத்தையும் எதிர்க்கக்கூடிய நிறுவனங்-களும் வரக்கூடும். மற்றொரு பக்கம், உலக ஜனத் தொகையானது தங்களின் நிலைமையை மேம்படுத்த முயற்சிக்கிறார்கள்; ஏனெனில், தேவனுடைய திட்டத்தில், ஒரு மாற்றத்திற்கான நேரம் வந்துவிட்டது. இந்த போராட்டத்தில் கர்த்தருடைய ஜனங்களுக்கு ஏதாவது பங்கு இருக்குமா? இல்லை! நாம் சமாதானத்தை உருவாக்குகிறவர்களும், சமாதானத்தை ஊக்குவிக்கிறவர்களுமாய் இருக்கிறோம் என்பதை எப்போதும் நினைவில் வைத்து, காரியங்களை நேராகவும் சரியாகவும் பார்ப்பதற்கு மற்றவர்களுக்கு உதவ வேண்டும். அத்தகைய போக்கானது அராஜகத்தையும் மோதல்களையும் அகற்றுவதற்கு முனையும்; என்றாலும் தீர்க்கதரிசனத்தின்படி, அதைத் தவிர்ப்பதற்கான எல்லா முயற்சிகளையும் தாண்டி அராஜகம் வரும். (தானி. 12:1). என்றாலும்கூட, சமுதாயத்தில் அதற்கு எதிர்ப்பு இருக்கிற-போதிலும் தேவனுடைய புதிய ஒழுங்குமுறையின் பங்கில் ஒரு வெற்றி இருக்க வேண்டும் என்பதைக் கர்த்தர் தம்முடைய வார்த்தையின் மூலம் நமக்கு காட்டுகிறார். அராஜகம் மிகவும் மோசமான விஷயமாயிருக்கிறது, அது ஏதோ ஒரு அரசாங்க அமைப்புகூட முற்றிலும் இல்லாத நிலையாகும்.

இந்த யுத்தமானது, தேவன் மாற்றத்தை ஊக்கு-விக்கும் வழியாக இருக்கிறது, இது பூமிக்குரிய ஆட்சியாளர்களின் ஆட்சியின் போது, ராஜ்யத்தின் பூமிக்குரிய கட்டமைப்பை அமைப்பதின் மூலமாக குறித்துக் காட்டப்பட்டிருக்கிறது. இது இந்த பூமிக்குரிய அரசாங்கங்-களின் முடிவைக் குறிக்கும். (தானி. 2:44). இதற்கு பிறகு, "**புதிய வானம் மற்றும் புதிய பூமியினுடைய**" ஆரம்பத்தை இது கொண்டுவரும். (வெளி. 21:1). புதிய வானமானது புதிய மதசம்பந்தமான ஆளுகிற வல்லமையாயிருக்கும், பரலோக மகிமையில் திருச்சபையானது, நம்முடைய ஆண்டவருடன் கூட சிங்காசனத்தில் அமர்ந்திருக்கும். புதிய பூமியானது பூமிக்குரிய ஒழுங்காக பாத்திரவான்களின் கைகளில் இருக்கும். கிறிஸ்துவின் ராஜ்யம் முழுமையாக ஸ்தாபிக்கப்படும்போது ஆயிர வருடத்தின் இழந்து போனதை திரும்ப கொடுக்கும் பணிக்காக "கர்த்தர் அவர்களை பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பார்." (சங். 45:16; அப்.3:19-21). ***

# மேசியா – தேவனுடைய தாசன்

**"இதோ நான் ஆதரிக்கிற என் தாசன், நான் தெரிந்துகொண்டவரும், என் ஆத்துமாவுக்கு பிரியமானவரும் இவரே! என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணினேன். அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார்." (ஏசா. 42:1).**

ஏசாயா தீர்க்கதரிசன புஸ்தகத்தின் கடைசி பகுதியானது (40-66 அதிகாரங்கள்) பரிசுத்த வேதாகமத்தினுடைய மிகவும் அழகானதும் உன்னதமானதுமான தீர்க்கதரிசனங்களின் தொகுதிகளில் ஒன்றை முன் வைக்கிறது. அது இஸ்ரயேலுக்கு ஓர் விசேஷமான ஆறுதலின் செய்தியுடனும், "**வனாந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய சத்தத்துடனும் தொடங்குகிறது: கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள். அவாந்தரவெளியிலே நம்முடைய தேவனுக்கு பாதையை செவ்வைப்பண்ணுங்கள்.**" (ஏசா. 40:3). இது "**புதிய வானங்கள் மற்றும் புதிய பூமி**" பற்றிய விவரத்துடனும், அதில் நீதி வாசமாயிருப்பதைக் குறித்தும், இரண்டாம் மரணமாகிய துன்மார்க்கரின் அழிவைக் குறித்தும் (அழிவானது புழு மற்றும் அக்கினியால் அடையாளப்படுத்தப்படுகிறது), அதாவது அந்த அழிவானது முழுமையான அழிவாகவும், தவிர்க்க இயலாத அழிவாகவும், அழிவாகவும் இருப்பதை குறித்த விவரத்துடனும் முடிவடைகிறது – "**அவர்களுடைய பூச்சி சாகாமலும், அவர்களுடைய அக்கினி அவியாமலும் இருக்கும்.**" (ஏசா. 65:17; 66:15,16,22-24).

இந்த 27 அதிகாரங்களின் தொகுப்பினை, தர்க்கரீதியாக அல்லது நியாயமாக, ஒவ்வொன்றும் ஒன்பது அத்தியாயங்களைக் கொண்ட மூன்று சமப்பகுதிகளாக பிரிக்கலாம். முதல் பகுதியானது, (ஏசாயா 40-48 அதிகாரங்கள்) பெரும்பாலும் பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து இஸ்ரயேலின் விடுதலையைப் பற்றி பேசுகிறது; இங்கே கோரேஸ் தேவனுடைய "மேய்ப்பராகவும்" அவருடைய அபிஷேகம் பண்ணப்பட்டவராகவும் பேசப்படுகிறார், அதாவது அவருடைய மேசியா (அபிஷேகம் பண்ணப்பட்டவர் (Annointed) என்பதன் எபிரேய பதம் 'மஷியாக்' (Mashiach) என்பதாகும்), மூலமாக, இஸ்ரயேல் பழைய நிலைக்குத் திரும்பவும் கொண்டுவரப்பட வேண்டியதிருந்ததைப் பற்றி பேசுகிறது.

மற்ற ஆட்சியாளர்கள், உதாரணமாக, சவுல் (1 சாமு. 12:3; 24:6,10; 26:9,11,16), தாவீது (சங். 89:20; 18:50) மற்றும் சாலமோன் (1 ராஜா. 1:33-39) ஆகியோரிடத்தில், பாவங்கள் மற்றும் குறைப்பாடுகள் இருந்த போதிலும் ஒவ்வொருவரும் தேவனுடைய மேசியாவாக, அவராலே அபிஷேகிக்கப்பட்டவர்களாக, தேவன் தம்முடைய ஜனத்தை இறுதியில் அவர் மூலமாய் விடுவிக்க இருக்கும் மாபெரும் ராஜாவாகிய மேசியாவை அவர்கள் ஒவ்வொருவரும் சில விஷயங்களில் அடையாளப்படுத்துகிறவர்களாக இருக்கிறார்கள். அவ்வாறாகவே, தேவனுடைய மேசியாவாகிய கோரேசுக்கு, அவர் (தேவன்) "**பூமியின் சகல ராஜ்யங்களையும்**" கொடுத்ததோடுகூட, மேலும் தேவனுக்காக எருசலேமிலே ஒரு வீட்டை கட்டும்படியாகவும், சிறைப்பிடிக்கப்பட்டவர்களை விடுவிக்கும்படியாகவும், ("**அவருடைய ஜனங்கள் எல்லாரிலும்**" உங்களுக்குள் இருக்கிற எவனையும் விடுவிக்கும்படி – எஸ்றா 1:1-4) அவரை ஏற்படுத்தினார். தேவனுடைய மாபெரும் ராஜாவாகிய மேசியா முன்னுரைக்கப்பட்டிருக்கிறார் (ஏசா. 61:1-3), அவரை அவர் "**அபிஷேகம் பண்ணினார்.... சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையை கூறவும், சிறையை திறக்கவும்** ("ஷியோலில்" மரணத்தின் உணர்வற்ற நிலையில் – தானி. 12:1.2; சங். 68:18) **கட்டுண்டவர்களுக்கு கட்டவிழ்த்தலை கூறவும்** (மரண சிறை) – **சீயோனிலே துயரப்பட்டவர்களை சீர்ப்படுத்தவும், அவர்களுக்கு சாம்பலுக்கு பதிலாக சிங்காரத்தையும், துயரத்துக்கு பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்கு பதிலாக துதியின் வஸ்திரத்தைக் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார் அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்.**"

முதல் ஒன்பது அதிகாரங்கள் அடங்கிய பகுதியானது (40-48), 70 வருடங்கள் தேசம் பாழாய் கிடந்ததைத் தொடர்ந்து, இஸ்ரயேல் பழைய நிலைக்கு திரும்பவும் நிலைநாட்டப்படுவதையும், கோரேஸ் ராஜாவின் கீழ் அப்பொழுது அடைந்ததைவிட மிகவும் மேம்பட்ட விடுதலையை அடைவதையும் சித்தரிக்கிறது. எனவே, தேவனுடைய ராஜாவாகிய மேசியாவின் கீழாக மாபெரும் நிறைவேறுதலான திரும்பக் கொடுத்தலை இது சுட்டிக்காட்டுகிறது, அப்பொழுது "**கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும்.**" (ஏசா. 40:5). கர்த்தருடைய "மீட்கப்பட்ட" ஊழியக்காரர்களின் ஆசீர்வாதத்தைப் பற்றிய விவரத்துடன் அது (48:20-22) முடிவடைகிறது. (அவர்களுடைய துன்பத்திற்கு ஊடாகவும் அதற்கு பிறகும்) இது துன்மார்க்கரின் நிலைமைக்கு நேர்மாறாக முன்வைக்கப்படுகிறதாயிருக்கிறது, ஏனெனில் "**துன்மார்க்கருக்கு சமாதானம்** (செழிப்பில்லை – மற்றும் நித்திய ஜீவனைக் குறித்ததான நம்பிக்கையும் இல்லை) **இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்.**"

இரண்டாம் பாகமானது (அதிகாரங்கள் 49-57) பாபிலோனிலிருந்து விடுவிக்கப்படுதலைப்பற்றி இன்னும் அதிகமாகவும், மேசியா நிராகரிக்கப்படுதல் மற்றும் அவருடைய பாடுகள் முதலியவற்றைக் குறிப்பதுடன் நன்மை மற்றும் தீமையாகிய இரண்டின் முன்னேற்றங்களையும் விவரிக்கிறது. முடிவாக (ஏசா. 57:18-21) தங்களின் வீழ்ச்சியடைந்த நிலையின் நோய்களிலிருந்து குணமடைய விரும்புகிற "**நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களுக்கு**" (வசனம் 15), "ஆறுதல்" சமாதானம், "சமாதானம்" (மிகுந்த

செழிப்பு) என்ற முன்னறிவிப்புகளுடன் முடிவடைகிறது. ஆனால், "**கொந்தளிக்கும் கடலைப்போல, அமைதியாயிராமல் தங்கள் தண்ணீரை நுரைத்தள்ளுகிறவர்களான**" துன்மார்க்கருக்கோ அமைதியின்மையும் ஆபத்துக்களுமே வருமென்று முன்னுரைக்கிறது. இந்த இரண்டாம் பகுதி முதல் பகுதியைப் போலவே ஒத்தக் கருத்துடன் முடிவடைகிறது. "**துன்மார்க்கருக்கு சமாதானம் இல்லையென்று என் தேவன் சொல்லுகிறார்.**"

மூன்றாம் பகுதி (அதிகாரங்கள் 58-66) நீதிமான்கள் மற்றும் துன்மார்க்கர் ஆகிய இருசாரராரைப் பற்றிய விளக்கத்தையும் அவர்களுடைய கிரியைகளுக்கு தக்கவாறு அவர்களுடைய இறுதியான வெகுமதியளிப்பதையும் ஒரு முடிவுக்கு கொண்டு வருகிறது, இதனோடு தம்முடைய ஜனத்தின் மகிழ்ச்சிக்கு கர்த்தர் காணப்படுதல் (66:5), புதிய ஒழுங்கு பிறத்தல் (வசனம் 7-9), எருசலேம் பழைய நிலைக்குத் திரும்பக் கொண்டுவரப்படுதல் மற்றும் ஆசீர்வதிக்கப்படுதல் (வசனங்கள் 10-14,20), அவர்களுடைய ஊழியங்களின் கீழ் புறஜாதியார் ஆசீர்வதிக்கப்படுதல், (வசனங்கள் 12,19-ஐ அதிகாரம் 60 உடன் ஒப்பிடுக) மாம்சமான யாவரும் தேவனுக்கு முன்பாக தொழுது கொள்ளுதல் (வசனம் 23), துன்மார்க்கர் அனைவரும் அழிக்கப்படுதல் (வசனம் 24), என்றென்றுமுள்ள புதிய வானமும் புதிய பூமியும் ஸ்தாபிக்கப்படுதல் ஆகியவையும் வர்ணிக்கப்பட்டுள்ளது. எப்பேற்பட்ட ஒரு மகிமையான நிறைவு!

## தேவனுடைய நீதி மீற முடியாதது

வரவிருக்கக்கூடிய இந்த அனைத்து ஆசீர்வாதங்களுக்குமான அந்த மகா பெரிய மையம் எது? அவைகள் தேவனிடமிருந்தே வருகின்றன, அவர் தம்முடைய சொந்த நீதியின் பிரமாணத்தை மீறவோ அல்லது எல்லை மீறவோ முடியாது. (யாத். 34:7). ஆதாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் இரட்சிப்பை அருளும்போது தம்முடைய சொந்த பிரமாணத்தின் நீதியான கோரிக்கைகளை அவர் புறக்கணித்திருந்தால் அவர் எப்படி ஓர் நீதியுள்ள தேவனாகவும், இரட்சகராகவும் இருக்க முடியும்? (ஏசா. 45:21). ஆதாமின் கீழ்ப்படியாமையின் காரணமாக, அவன் மீது மரண தண்டனையை அறிவித்தார், நிச்சயமாகவே, அவனுடைய அரையிலுள்ள சந்ததிக்கும் சேர்த்தே மரண தண்டனையை அறிவித்தார். (ஆதி 2:17; 3:3,17-19).

தேவன் தம்முடைய சொந்த நீதியை மீறாமல் நித்திய மரணத்திலிருந்து ஆதாமையும் அவனுடைய சந்ததியையும் இரட்சிப்பதற்கு ஏற்பாடு செய்ய ஒரே ஒரு வழி மட்டுமே இருந்தது; அது கீழ்ப்படியாமையினால் ஜீவனின் அதிகாரத்தை இழந்த பூரண மனிதனாகிய ஆதாமுக்காக ஓர் பதிலீடாக ஒரு மீட்கும் பொருளை அளித்தலாக இருந்தது. ஆதாமின் சந்ததியினர் அனைவரும் அவனுடைய ஆக்கினைத் தீர்ப்பை சுதந்தரித்தப்படியால்தான், "**ஒருவனாவது எவ்விதத்தினாலாவது தன் சகோதரானை மீட்டுக்கொள்ளவும், அவனிமித்தம் மீட்கும் பொருளை (ஒரு நிகரான கிரயம், ஓர் இணையான கிரயம்) தேவனுக்கு கொடுக்கவுங்கூடாமற்போயிற்று**" (சங். 49:7), அவர்கள் அனைவரும் மரண தண்டனைக்குள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்; ஆதாம் பாவத்துக்குட்பட்டபோது, அவனது ஒரு பாகமாயிருந்த இனத்தின் சார்பாக மரண தண்டனைக்கான மீட்கும் பொருளை செலுத்துவதற்கு அவர்களில் ஒருவரிடமும் ஓர் பூரணமான மனித ஜீவன் இல்லை.

தேவனுடைய நீதியானது "**ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல், கைக்கு கை, காலுக்கு கால்**" (யாத். 21:23,24) என்ற சரியானதை, அதாவது ஓர் சரிநிகரான ஒன்றைக் கோருகிறது. எனவே ஆதாம் (அவன் பாவத்திற்கு உட்பட்டபோது அவன் அரையிலிருந்த அவன் சந்ததியும்) மீட்கப்பட வேண்டுமானால், பூரணமான மனித ஜீவன், ஆதாம் பாவம் செய்வதற்கு முன்பு இருந்ததைப்போலவே சமமதிப்புள்ள ஒரு பூரணமான மனித ஜீவன் ஆதாமுக்கு பதிலாக அளிக்கப்பட்டு பலி செலுத்தப்பட வேண்டியது அவசியமாயிற்று; அதாவது அதற்கு நிகரான ஒரு மீட்கும்பொருள் அவசியமாகும்; ஏனெனில் இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது.

நமது முதல் பெற்றோரின் அத்தியிலையிலான உடைகளை தேவன் அங்கீகரியாததன் மூலம் இது காண்பிக்கப்பட்டது. சிலர் தங்களுடைய சொந்த கைகளின் கிரியைகளால் தேவனுக்கு முன்பாக தங்கள் பிரயாசங்களின் நிமித்தமாக தங்களை நியாயப்படுத்த முயன்ற முயற்சிகளை அது அடையாளப்படுத்தியது. மற்றொரு புறத்தில், தேவன் அவர்களுடைய அத்தியிலையிலான உடைகளை மாற்றி அதற்கு பதிலாக இரத்தம் சிந்துவதின் அவசியத்தை வெளிப்படுத்தும் தோலினாலான உடையை கொடுப்பதின் மூலமாக அடையாளமான மூடுதலை காண்பிக்கிறார். (ஆதி. 3:7,21). "**மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது: நான் அதை உங்களுக்கு பலிபீடத்தின் மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காக பாவ நிவிர்த்தி** (அடையாளமாக) **செய்யும்படிக்கு கட்டளையிட்டேன்: ஆத்துமாவிற்காக பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே.**" (லேவி. 17:11). இது இஸ்ரயேலுக்கான ஒவ்வொரு வருடமும் நிகழும் பாவநிவிர்த்தி நாள் பலிகளினாலும் மற்றும் பிற பலிகளினாலும் காண்பிக்கப்படுகிறது. (லேவி. 16; யாத். 30:10).

## ஓர் மனித மீட்கும் பொருள் – ஒரு பலி அவசியமாகிறது

நிச்சயமாகவே, பலியிடப்பட்ட ஒரு மிருகம் உண்மையில் மீட்கும் பொருளையோ அல்லது அதற்கு இணையான கிரயத்தையோ மானிட ஜீவிக்காக கொடுக்க இயலாது; காளைகள் மற்றும் வெள்ளாட்டுக்கடாக்களின் இரத்தம் பாவத்தை நீக்கமாட்டாது. அடையாளமான பலிகள் தேவன் அவருடைய மேசியாவில் வழங்கவிருக்கும் மாபெரும் பலியை அடையாளப்படுத்தி மட்டுமே காட்டின, "**உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி என் வார்த்தைகளை அவர் வாயிலே அருளுவேன்: நான் அவருக்கு கற்பிப்பதையெல்லாம் அவர் உங்களுக்குச் சொல்லுவார். என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்கு செவிகொடாதவன் எவனோ**

***அவனை நான் விசாரிப்பேன்***" (உபா. 18:15-19) என்று மோசே மூலமாய் தேவனால் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது.

மேசியா தம்முடைய பூரண மனித ஜீவனை மாபெரும் பலியாக்கி, ஆதாம் மற்றும் அவனுடைய சந்ததியின் சார்பாக கொடுக்கப்பட்ட மீட்கும்பொருளினால் அல்லது சரிநிகரான கிரயத்தினால் தேவனுடைய நீதியை திருப்திபடுத்தும் அடிப்படை கோட்பாடும், அதன் விளைவாக இஸ்ரயேலுக்கும், புறஜாதியாரின் உலகத்திற்கும் வருவதற்கான ஆசீர்வாதங்களும், பரிசுத்த வேத வாக்கியங்களின் பிரதான கருப்பொருளாக அமைந்துள்ளன, பல தீர்க்கதரிசனங்களும், அடையாளங்களும், வரலாற்று நிகழ்வுகளும் இதைச் சுட்டிகாட்டுகின்றன.

இந்த பொதுவான கருப்பொருளோடுதான் ஏசாயாவின் மாபெரும் தீர்க்கதரிசனங்கள் 40-66 வரையிலான அதிகாரங்களில் கூறப்பட்டள்ளது, அதன் இரண்டாவது அல்லது மையப் பிரிவில் (அதிகாரங்கள் 49-57), மற்றும் அந்தப்பிரிவின் உள்மையத்தில் (52:13—53:12), அவர்களுடைய மீட்பராகிய "**இஸ்ரயேலின் பரிசுத்தரால்**" (41:14) இஸ்ரயேலின் சகல பாவங்களும் மன்னிக்கப்படுவதற்கான அடிப்படை காணப்படுகிறது (40:2). மனிதனின் சார்பாக தேவனுடைய நீதியை திருப்திசெய்வதற்கான மாபெரும் பாவநிவாரண பலி இங்கே விவரிக்கப்பட்டுள்ளது, இதன் அடிப்படையில்தான், "***கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் ஆனந்த களிப்புடன் பாடி சீயோனுக்கு திரும்பி வருவார்கள். நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேல் இருக்கும்: சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள், சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்***" (ஏசா. 51:11) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஏசாயா 52:13 முதல் 53:12-வரையில் ஏசாயாவின் அற்புதமான, மேசியானிய தீர்க்கதரிசனங்களின் இருதயம் போன்ற, மையமானதை நாம் கண்டடைகிறோம், ஆபிரகாமின் வித்தாக இஸ்ரயேலுக்கும் ஆயிர வருட யுகத்தில் உள்ள அனைவருக்கும் தேவன் கொண்டுவர இருக்கிற அனைத்து ஆசீர்வாதங்களுக்கும் அடிப்படையாக இருக்கிறது. (ஆதி. 22:18). யேகோவா தேவன் இயேசுவிடம் சொன்னதாவது: "**நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்.**" (சங். 110:1,4). ஆபிரகாம், நம்முடைய ஆண்டவராகிய மேசியாவை அடையாளப்படுத்துகிற மெல்கிசேதேக்கிற்கு தசமபாகம் செலுத்தினார். (ஆதி. 14:20).

மெல்கிசேதேக்கு என்ற பெயருக்கு நீதியின் ராஜா என்று அர்த்தம். பின்னர் இவர் சாலேமின் ராஜாவானார் (சமாதானம்; ஆதி. 14:18); மேசியாவான இயேசு, சமாதானப் பிரபு (ஏசா. 9:6,7) மற்றும் தாவீதின் ராஜாவாக, தாவீதின் நீதியான கிளையாக ஆட்சி செய்து, செழித்து, பூமியில் நியாயத்தீர்ப்பையும் நீதியையும் நிறைவேற்ற தகுதி பெறுவதற்கு (எரே. 23:5,6) அவர் முதலாவதாக நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றுவது அவசியமாக இருந்தது. பூரண ஜீவனை தன்னுடைய கீழ்ப்படியாமையினாலே இழந்து போன ஆதாமுக்கும் அவன் சந்ததிக்கும் ஒரு பூரண மனித ஜீவனை மீட்கும் பொருளாக, அதாவது அதற்கு நிகரான கிரயமாக கொடுப்பதின் மூலம் அவர் இதை நிறைவேற்றினார், யூதர்களை அவர்களுடைய ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுவிக்க மோசேயின் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவதும் அவசியமாக இருந்தது. எனவே, அவர் அதை நிறைவேற்றுவதற்கான எல்லாவற்றையும் பூரணமாகவும், பாவம் அற்றதாயும், மரத்தின்மேல் தொங்க/தூக்கப்பட வேண்டிய சாபத்தையும் நிறைவேற்றினார் (உபா. 21:22,23). இதுமுதற்கொண்டு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களின் நீதிக்காக, நியாயப்பிரமாணமானது, முடிவை அடையவும், இஸ்ரயேலிலிருந்து அதன் சாபங்களை நீக்கவும், நியாயப்பிரமாணத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்காகவும், ஆதாமினால் குற்றவாளிகளாக்கப்பட்டவர்களுக்காகவும், அவர்களில் எவராலும் கடைபிடிக்க முடியாத நியாயப்பிரமாணத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றினார் (உபா. 27:26; 28:15; சங். 130:3; 143:2; எரே. 11:3; ஏசா. 53:11,12). இந்த மாபெரும் சத்தியமே ஏசா. 52:13—53:12ல் முக்கியமாக வலியுறுத்தப்படுகிறது. இது ஏசாயாவின் மகிமை பொருந்திய மேசியானிய தீர்க்கதரிசனங்களின் இருதய பகுதியாகும்.

## யேகோவாவின் தாசன் அடையாளங்கண்டு கொள்ளப்பட்டார்

"**என் தாசனாகிய இஸ்ரயேலே, நான் தெரிந்த கொண்ட யாக்கோபே, என் சிநேகிதனான ஆபிரகாமின் சந்ததியே**" என்று ஏசாயா 41:8-ல் வாசிக்கிறோம். அவ்வாறே, "**நீங்களும் நான் தெரிந்து கொண்ட என் தாசனும் எனக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்**" என்று ஏசாயா 43:10-ல் வாசிக்கிறோம். "**இப்போதும், என் தாசனாகிய யாக்கோபே, நான் தெரிந்துகொண்ட இஸ்ரயேலே**" என்று ஏசா. 44:1-ல் வாசிக்கிறோம். இதன்படி ஏசாயா 52:13-ல், தம்முடைய தாசன் என்று தேவன் கூறுவது தனிநபரைக் குறித்து அல்ல ஆனால் ஓர் ஜனமாக இஸ்ரயேலைக் குறித்தே கூறுகிறார் என்று சிலர் எண்ணங்கொள்கிறார்கள். ஒரு தேசத்தைக் குறித்து சொல்லப்படுவது பெரும்பாலும் தனிநபரையே மையமாக கொண்டிருக்கும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும், அதேசமயம், தனிநபரை தவிர தேசமோ அதின் மக்களோ முற்றிலும் மாறுபட்டவர்களாக இருப்பார்கள், ஒருவேளை தோற்றம் அல்லது பெயரால் மட்டுமே விதிவிலக்காக இருப்பார்கள், அதன்படி, யாத். 4:22,23 மற்றும் ஓசியா 11:1-ல் இஸ்ரயேல் தேவனுடைய குமாரன் என்றும், அவருடைய முதற்பேறானவர் என்றும் அழைக்கப்படுகிறது; ஆனால் இந்த மரியாதைக்குரிய அழைப்பானது கீழ்ப்படியாமையினாலே பொதுவாக தேசத்தினால் தற்காலிகமாக இழக்கப்பட்டிருந்தது (எசே. 14:16). ஆயினும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தனிநபர்கள் இதனை தக்கவைத்து கொண்டிருந்தனர் (சங். 89:19-37 வரை பார்க்கவும்). எனினும் ஏற்ற காலத்திலே அவர்களுடைய மேசியாவின் மூலம் அது மறுசீரமைக்கப்படும் (ஓசி. 1:10,11). "**இஸ்ரயேல் என் குமாரன்**" என்ற கூற்று, இஸ்ரயேல் முழுவதிற்கும் தக்கவைக்கப்படவில்லை, ஆனால், தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட அவருடைய மேசியாவாகிய, "**குமாரன்**" என்ற நபரில் உணரப்பட்டிருந்தது.




(சங். 2:2,7,12). தேவன் தம்முடைய குமாரனை, ஒரு தனிநபரை தம்முடைய தாசனாக எழுப்பினார். மறுபடியும் இங்கே “ஜனத்தில் தெரிந்துக் கொள்ளப்பட்டவனை உயர்த்தினேன்” என்று தேவன் கூறுகிறார். (சங். 89:19).

ஏசாயா 42:1-7 மிகவும் தெளிவாக காண்பிப்பது என்னவென்றால் தேவனுடைய தாசன் என்ற கூற்று தனிநபரிலேயே மையமாக கொண்டுள்ளது என்றும் அந்த விளக்கத்தை உறுதியாக ஒத்துபோகும்படி இஸ்ரயேல் தேசத்திற்கோ அல்லது அத்தேசத்தில் மீதமிருந்தவர்களையோ குறிப்பிடுவதற்கு பயன்படுத்த முடியாது, மாறாக, தேசத்துக்கும் வெளியே இருக்கும் ஒரு தனிப்பட்ட தேவனுடைய தாசன் இங்கே சித்தரிக்கப்படுகிறார். அவர் தேசத்திற்கும் மேலாக உயர்ந்தவர், ஒரு தேசமாக இஸ்ரயேல் இழந்தது அவரில் உணரப்படுகிறது. அவர் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவர், அவர் தேர்ந்தெடுக்கப்பட்டவர், அவரில் அவர் களிகூறுகிறார், அவர் “**புறஜாதியாருக்கு நியாயத்தீர்ப்பினை**” கொண்டு வருபவர். தேவன் அவரை “**நீதியுள்ளவர்**” (மெல்கிசேதேக்கு - நீதியின் ராஜா) என்று அழைத்து அவரை “**ஜனங்களுக்கான உடன்படிக்கையாக**” கொடுத்தார். எனவே இவர் ஜனங்களை குறித்துக்காட்டுபவர் அல்ல, ஐக்கியத்தை ஏற்படுத்தும் கட்டமைப்பு மற்றும் மீட்கும்பொருள் ஆகியவைகளின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்படப்போகிற தேவனுக்கும் இஸ்ரயேலுக்கும் இடையிலுள்ள நித்திய புதிய உடன்படிக்கையை குறித்துக்காட்டுபவராக இருக்கிறார். (எரே. 50:4,5; 31:31-34; 32:37-44; எசே. 16:53-63; 36:21-38).

மேலும், இந்த தனிநபரான ராஜாவும் மேசியாவுமாகிய தேவனுடைய இந்த தாசன் “**புறஜாதியாருக்கு ஒளியாகவும்,**” (ஏசா. 42:6ஐ 49:6; 51:4-உடன் ஒப்பிடவும்) “**குருடரின் கண்களைத் திறப்பவராகவும்**” (ஏசா. 35:5; 29:18), சிறைப்பட்டோரை (மரண சிறைப்பட்டோரை) சிறையிலிருந்தும் (உணர்வற்ற மரண நிலையிலிருந்தும், 49:9; 61:1), சிறைசாலைக்கு (மரணிக்கும் நிலை) வெளியே இருளில் உட்கார்ந்திருப்பவர்களையும் வெளிக்கொண்டு வருபவராகவும் இருக்க வேண்டும் (வசனம் 7). இவ்வாறாக, ஏசா. 42:1-7-ல் தேவனுடைய உண்மையான, தனிநபராகிய, தாசனை பற்றிய விளக்கம் இருக்கிறது, தேசத்தைக் குறித்தோ, வேறுபடுத்திகாட்டும் விதமாக அதன் தோல்வியும் விசுவாசமின்மையும் வசனம் 18-25-ல் கோடிட்டுக்காட்டப்பட்டுள்ளது. புறஜாதியார், இஸ்ரயேலின் மேசியாவாகிய தேவனுடைய தாசன் மீது வைக்கப்பட்டுள்ள ஒளியை ஏற்றுக் கொள்ளும்போது மட்டுமே இஸ்ரயேலின் வெளிச்சத்திற்குள் வருவார்கள். (ஏசா. 60:1-3).

ஏசா. 49:1-7-ல் தேவனுடைய தாசன், இஸ்ரயேல் என்னும் தேசமாக முன்வைக்கப்படாமல், ஒரு தனி நபராகவே முன்வைக்கப்படுகிறார், யாக்கோபின் விஷயத்திலும்கூட - அவர் இஸ்ரயேல் என்றே அழைக்கப்படுகிறார், (வசனம் 3) அதற்கு, “தேவனுடைய பிரபு/இளவரசர்” என்று அர்த்தம். (ஆதி. 32:28). இந்த தேவனுடைய பிரபுவானவர் (Prince-இளவரசர்) தேவன் தம்மை கருவிலேயே தம்முடைய தாசனாக இருக்கும்படி உருவாக்கினார் என்பதை சாட்சியிடுகிறார் (வசனங்கள் 1,5). மெய்யாகவே, சர்ப்பத்தின் (சாத்தானுடைய) தலையை நசுக்கி போடுகிற ஸ்திரீயின் வித்தானவராகவும், கன்னிகைக்கு பிறந்த ஒருவராகவும், இம்மானுவேல், “தேவன் நம்மோடு இருக்கிறார்” என்று அர்த்தம் கொள்ளும் பெயரை உடையவராகவும் அவர் இருக்கிறார்; அவருக்கு ஒரு மானிட தாய் இருந்தார், அதே நேரத்தில் மானிட தகப்பனில்லாதவர், ஏனெனில் அவர் தேவனுடைய ஒரேபேறான குமாரனாக இருந்தார். (சங். 2:7; ஆதி. 3:15; சங். 22:9,10; ஏசா. 7:14).

இந்த தேவனுடைய தாசன் “இஸ்ரயேல்,” “தேவனுடைய பிரபு/இளவரசர்” என்ற பெயருக்கு முழு உரிமையுடையவராய் இருக்கிறார், ஏனெனில் அவர் ஒருவரே நியாயப்பிரமாணத்தின் நீதியை பாவமில்லாமல், பூரணமாக அதைக் கைக்கொண்டு நிறைவேற்றினார்; ஏனெனில் அவர் ஓர் மானிட தகப்பனால் ஜெனிப்பிக்கப்பட்டவராக இராததால் மரண தீர்ப்பிற்கு கீழான பாவத்தினால் சபிக்கப்பட்ட ஜீவனை அவர் பெறவில்லை. இவர் தன் சகோதரனுக்காக மீட்கும்பொருளை செலுத்த முடியாத வீழ்ச்சியடைந்த ஆதாமின் சந்ததியாரில் ஒருவராக இருக்கவில்லை. (சங். 49:7). நியாயப்பிரமாணத்தை முழுமையாக கைக்கொண்டபடியால் அவர் பூரண மானிட ஜீவியாக நித்திய ஜீவனுக்கான அவருடைய உரிமையை நிரூபித்துள்ளார். (லேவி. 18:5). கூடுதலாக, அவர் தம்?முடைய மானிட ஜீவியத்தை ஒரு மீட்கும் பொருளாக, சரி நிகரான ஈடுக்கிரயமாக ஆதாமுக்கும் அவன் பாவத்தில் விழுந்தபோது அவனுடைய அரையில் இனப்பெருக்கத் திறனில் சேமித்து வைக்கப்பட்டிருந்த சந்ததிக்கும் பலித்தியாகமாக செலுத்தினார். ஆதாம் பூரண மனித ஜீவனை தனக்கும், தன் சந்ததியினருக்கும் இல்லாதவாறு இழந்து போனார். மற்றொரு புறத்தில் விசுவாச உண்மைத்துவமுள்ள, பலியின் மனப்பான்மையுடைய தாசனாக நமது ஆண்டவராகிய இயேசு, ஆதாமிற்கு சரிநிகராக இருக்கக்கூடியதை முழுநிறைவாக நிறைவேற்றினார். எனவே தேசமாக ஆதியிலே அழைக்கப்பட்ட நோக்கத்தையும் பூமியின் அனைத்து தேசங்களையும் ஆசீர்வதிக்கும் அதின் பணியையும் மேற்பார்வையிடவும் அதை செய்து முடிப்பதற்குமான பொறுப்புள்ளவராக அவர் இருக்கிறார்.

(ஆதி. 22:17,18). இவர் ஒருவரே இஸ்ரயேலர் எல்லாருக்குள்ளும் தேவனுடைய சத்தத்திற்கு முழுதும் கீழ்ப்படிந்தவராய் தேவனோடு தமக்கிருந்த உடன்படிக்கையை பூரணமாய் காத்துகொண்டவராய் இருக்கிறார். (யாத். 19:4-6). அதனால்தான் இவரே தேவனுடைய "**சகல ஜனங்களுக்கும் மேலான விசேஷ சம்பத்தாக/பொக்கிஷமாக**" இருக்கிறார். இவர் மூலமாய் மட்டுமே இஸ்ரயேல் தேசமும் மற்றெல்லா ஜனங்களும் நித்திய ஜீவனுக்கேதுவான இரட்சிப்பை பெற்றுக் கொள்ள முடியும். ***

*[தொடர்ச்சி பி.எஸ் மார்ச்-ஏப்ரல் 2009 இதழில்.....]*

# அகந்தை - பொறாமை - கோபம் - கொலை

## ஆதியாகமம் 4:1-16

*-PDC*

ஆதாமுக்கும் ஏவாளுக்கும் ஏதேன் தோட்டத்தில் குழந்தைகள் ஏதும் பிறந்திருக்கவில்லை. அவர்களுடைய முதற்பேறானவனை பெற்றெடுப்பதற்கு கொஞ்சகாலத்திற்கு முன்பாக அவர்கள் முகத்தின் வியர்வையோடு உழைத்தனர். சந்தேகமின்றி அவன் பொறாமையும் மற்றும் மகிழ்ச்சியற்ற மனநிலையும் அவன் பிறப்பின் அடையாளமாக இருந்தன. ஏதேனில் மகிழ்ச்சியை அதிகம் அறிந்த அவர்களுக்கு கடின உழைப்பானது அவர்களில் எரிச்சலை ஏற்படுத்தியது. ஒருவர் மீது ஒருவர் குற்றம் கண்டுபிடித்தல், சிருஷ்டிகருக்கு எதிரான மனக்கசப்பு, தங்களுடைய பங்கில் அதிருப்தி ஆகியவைகள் அவர்களுடைய கர்ப்பப் பிறப்பாகிய, காயீனில் அநேகமாக அடையாளக் குறியிட்டன. அதுமுதற்கொண்டு இந்த உலகமானது "பாவம் மற்றும் மரணத்தின் ஆட்சியின்" கீழாக இருந்து வருகிறது.

அவர்களுக்கு குமாரத்திகளும் பிறந்தார்கள், பின்னர், அவர்களுடைய முதற்பேறான காயீனின் மனநிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட மனநிலையுடைய மற்றொரு குமாரனான ஆபேல் பிறந்தான். வாழ்க்கையின் அனுபவங்கள் அவர்களுடைய இருதயத்தை மென்மையாக்கியிருக்கலாம். அவர்கள் தங்களின் தண்டனைக்குரிய தீர்ப்புடன் தொடர்புடைய நம்பிக்கையின் அறிவிப்பை நினைவு கூர்ந்தார்கள்; அதாவது ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்க வேண்டும் என்பதாகும். ஆபேலின் மனநிலையானது, அவன் நொறுங்குண்ட மற்றும் தேவனை பிரியப்படுத்த விரும்பின இருதயத்தை கொண்டிருந்ததைச் சுட்டிக்காட்டுகிறது. எந்த அளவிற்கு மனநிலைகள் தங்கள் பிள்ளைகளை பாதிக்கிறது என்பதை பெற்றோர்கள் உணர்ந்து கொண்டால் எல்லோரும் தங்கள் பிள்ளைகள் மீது சாதகமான பிறப்பின் பண்புகளை வைக்க முயற்சிப்பார்கள்.

வருடங்கள் கடந்தன. ஸ்திரீயின் வித்து சம்பந்தப்பட்ட வாக்குத்தத்தம் மற்றும் தெய்வீக தயவினாலான மீட்பிற்கான நம்பிக்கை ஆகியவற்றினால் காயீனும் ஆபேலும் மனஎழுச்சியடைந்தார்கள். ஆசீர்வாதத்தைப் பெற காணிக்கைகளுடன் தேவனை அணுகினார்கள். ஆபேலின் மிருக ஜீவனின் பலியானது தேவனால் அங்கீகரிக்கப்பட்டது, ஏனென்றால் அது பாவமன்னிப்பிற்கான அடிப்படையாயிருக்கும் இயேசுவின் மரணத்திற்கான அவசியத்தை அடையாளப்படுத்தியது. காயீனுடைய பலியை தேவன் அங்கீகரியாமல் போனதானது, இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை என்பதை போதிக்கிறது. பலியானது ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு காயீன் தெய்வீக சித்தத்திற்கு கீழ்ப்படிந்து ஒரு மிருகத்தை வாங்கியிருக்க வேண்டும். அதற்கு பதிலாக, அவன் தன் இருதயத்தில் கோபம், பகை, தீய எண்ணங்கள் மற்றும் எரிச்சலை கொழுந்துவிட்டு எரிய அனுமதியளித்து ஒரு கொலை பாதகனானான். (ஆதி. 4:5-8).

ஆபேலின் இரத்தம் காயீனுக்கு எதிராக நீதிக்காக தேவனிடம் முறையிட்டது என்று பரி.பவுல் கூறுகிறார். ஆனால் இயேசுவின் இரத்தமோ பாவம் செய்பவர் மீது இரக்கங்கொள்ளும்படி தேவனிடம் மன்றாடியது. ஒவ்வொரு அநீதியும் தேவனிடம் நீதிக்காக கதறுகிறது. ஒரு விசேஷ உடன்படிக்கையின் மூலமாய் கிறிஸ்து இயேசுவும் அவருடைய தெரிந்து கொள்ளப்பட்ட சபையும் ஆதாமுக்காகவும் அவன் சந்ததிக்காகவும் அவர்களுடைய ஜீவனை ஜீவபலியாக ஒப்புக் கொடுக்கிறார்கள் (ரோம. 12:1). "**மேலான பலிகள்**" நிறைவேறியவுடன், இழந்து போனதை திரும்பக் கொடுத்தல் தொடரும்.

## பாடம் 12-ற்கான வினாக்கள்

1. ஏதேன் தோட்டத்தில் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் ஏதேனும் குழந்தைகள் பிறந்தனவா?
2. அவர்களுடைய முதல் குழந்தை யார்?
3. அவன் எந்த விதமான மனநிலையைப் பெற்றிருந்ததாகக் காணப்படுகிறது? பத்தி 1
4. ஆபேல் காயீனைப்போன்ற அதே விதமான மனநிலையை பெற்றிருந்தானா?
5. வாழ்க்கையின் அனுபவங்கள் எத்தகைய தாக்கத்தை ஆதாம் மற்றும் ஏவாளில் ஏற்படுத்தியிருந்தது?
6. மரண தண்டனையாகிய தீர்ப்போடு சம்பந்தப்பட்ட நம்பிக்கை யின் தகவல் ஏதேனும் இருந்ததா? ஆதியாகமம் 3:15, பத்தி 2.
7. காயீனும் ஆபேலும் ஏன் காணிக்கையுடன் கர்த்தரை அணுகினார்கள்?
8. எத்தகைய காணிக்கையை அவர்கள் செலுத்தினார்கள்? ஆதியாகமம் 4:3,4
9. காயீனுடைய காணிக்கையை அங்கீகரிக்காமல், தேவன் ஏன் ஆபேலின் காணிக்கையை அங்கீகரித்தார்? ஆதியாகமம் 4:4,5 இது என்ன போதிக்கிறது? எபி. 11:4
10. காயீன் அதை எவ்வாறு உணர்ந்தான்? ஆதி.4:6,7
11. ஆதியாகமம் 4:6,7-லிருந்து நாம் என்ன பாடத்தை கற்றுக்கொள்ள வேண்டும்?
12. ஆபேலின் இரத்தத்தைக் குறித்து பரி.பவுல் என்ன கூறுகிறார்?
13. இயேசுவோடு கூட கூடுதலாக ஆதாமுக்காகவும் அவனுடைய சந்ததிக்காகவும் தங்களுடைய ஜீவனை ஜீவபலியாக சமர்ப்பணம் செய்தவர்கள் யார்?
14. இந்த "மேலான பலிகள்" நிறைவடைந்தவுடன் அதனை தொடர்ந்து வரப்போவது எது? பத்தி 4 ***

# கேள்வி – பதில்

**கேள்வி:** இயேசுவுக்குள் ஒரு உறுதியான விசுவாசியான ஒருவர், பெலவீனத்தினிமித்தம், பாவத்தின் காரணமாக அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டால், கிறிஸ்துவை விசுவாசிப்பதின் மூலமாக அவர் இரட்சிப்பை அடைவாரா அல்லது பாவத்தின் அடிமைத்தனத்தின் காரணமாக நரகத்திற்கு அனுப்பப்படுவாரா?

**அன்பான சகோதரரே:** இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

உங்கள் கேள்வி மிக சிறந்த ஒன்றாகவும், மிக முக்கியமான ஒரு பதிலை பெறவும் தகுதியுள்ளதாயிருக்கிறது. மனுக்குலத்தின் பாவ நிலைமையைக் குறித்தும், நீதிமான் ஒருவனும் இல்லை, ஒருவனாகிலும் இல்லை என்ற வேதாகம கூற்றை குறித்தும் நாம் நன்கு அறிந்திருக்கிறோம். ரோமர் 7:19-ல் "**ஆதலால் நான் விரும்புகிற நன்மையை செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன்**" என்கிற அப்போஸ்தலரின் வார்த்தையைக் கவனியுங்கள். உண்மையாகவே நாம் தீமையில் பாடம் கற்றுக் கொள்ளவும் பாவம் மற்றும் மரிக்கும் நிலைமையானது பரம்பரையின் மூலம் நம்மை வந்தடைந்தது என்பதை புரிந்து கொள்ளவும் பிதாவானவர் நம்முடைய வாழ்வில் பாவம் கிரியை செய்ய அனுமதிக்கிறார் என்று பவுல் சுட்டிக்காட்டுகிறார் (ரோம. 5:12). நாம் பாவத்தினால் பாதிப்படைந்திருக்கிறோம் என்ற அங்கீகரிப்பானது, நம்மை முழங்காற்படியிடச் செய்து, பிறகு இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும், இது விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலின் நிலைப்பாட்டை நமக்குக் கொடுக்கிறது. (ரோம. 5:2; 4:3-8).

இதுவே தேவனிடம் வருவதற்கான முதற்படியாக இருக்கிறது. இன்னும் மற்றொன்றும்கூட இருக்கிறது, - அதாவது ஒருவனுடைய சுயத்தை ஆண்டவருக்கென்று முழுமையாக அர்ப்பணித்தல் அல்லது பிரதிஷ்டை செய்தல், அது அவருடைய அங்கீகரித்தலை பெற்றவுடன் அவராலே வெகுமதியளிக்கப்படுகிறது. அதன்பின் நம்முடைய வாழ்வில் நம்முடைய குணாம்ச அபிவிருத்திக்காக தம்முடைய பரிசுத்த ஆவியையும், அவருடைய நேர்மையான ஊட்டமளிக்கும் வல்லமையையும், செல்வாக்கையும் அருளுகிறார். இந்த பிரதிஷ்டையானது நம்மை தேவனிடம் மிக நெருக்கமாக கொண்டு வருகிறது.

நம்முடைய நடையில் இந்த நிலையை அடைந்த பிறகு, முந்தைய நாட்களில் உள்ள சில பாவங்களுக்கு அவனோ அல்லது அவளோ முற்றிலும் உடைத்து விடுவிக்கப்பட இயலாமல் ஒருவர் தடுமாறுகிறார் எனில் பிற்பாடு என்னவாகும்? அப்படியானால் என்ன? அத்தகைய கிறிஸ்தவனுக்கு தன்னுடைய சொந்த பெலவீனத்தின் காரணமாக இரட்சிப்பின் ஆசீர்வாதம் மறுக்கப்படுமா? நிச்சயமாக அப்படியல்ல! ஆதாமிடமிருந்து வம்சாவழியாக வருகின்ற பாவம் மற்றும் பெலவீனமாகிய இதற்காகவே கிறிஸ்து மரித்தார். இந்த நோக்கில் நாம் நமக்குள்ளேயே பாவத்துக்கு எதிராக போராட வேண்டும், ஆயினும் அபூரணமாயிருப்பதினால், இவ்வாழ்க்கையில் நாம் பாவத்திற்கு முற்றிலும் விடுபட்டவர்களாயிருக்க வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கவில்லை. நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால் தேவன் இருதயத்தை பார்க்கிறார் என்பதையும், அவர் நியாயந்தீர்ப்பது இருதயத்தின் நோக்கத்தையே என்பதை கவனத்தில் கொள்வது சரியாக இருக்கும். எனவேதான் பவுல் சிறிய அளவில் அவருடைய மாம்சம் அவரை ஆளுகை செய்தது என்று குறிப்பிட்டார். ஆனால் அவருடைய இருதயத்தின் நோக்கமோ அவருடைய பங்கில் தேவனுடைய ஊழியத்தை தம்மால் முடிந்தவரை சிறப்பாக செய்ய வேண்டும் என்பதாக இருந்தது. நாமும் அதையே நாடினோமாகில் தேவன் நம்முடைய பாவங்களை மூடப்பட்டதாக எண்ணுகிறார் என்பதில் நாம் முழு நிச்சயமாய் இருக்கலாம். எனினும் இது பாவத்திற்கான அனுமதி சீட்டாக கருதப்படக்கூடாது. தேவனுடைய கட்டளைகளை மிகவும் அசாதாரணமாக எடுத்துக்கொள்வதால் நமக்கு பயன் விளைவிக்காது. இருப்பினும் அவ்வப்போது மேற்கொள்கிற பெலவீனங்களின் நிமித்தமாக நாம் கட்டுகளிலிருந்தால், நாம் நிச்சயமாக ஜெபத்தில் ஆண்டவரிடம் சென்று அவருடைய மன்னிப்பை நாடி அவருடைய அருமையான குமாரனின் மூலமாக பெலத்தையும் தைரியத்தையம் நாடி, தவறுகளை மேற்கொள்ள போராட வேண்டும். அதே அப்போஸ்தலரால், "**மனுஷருக்கு நேரிடுகிற சோதனையே-யல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்: உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையை தாங்கத்தக்கதாக, சோதனையோடே அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்**" (1 கொரி. 10:13) என்பதாக நமக்கு உறுதியளிக்கப்படுகிறது.

மிக அன்பான கிறிஸ்தவ வாழ்த்துக்கள்,
பைபிள் ஸ்டாண்டர்ட் மினிஸ்ட்ரீஸ்

# பகற்பொழுதுக்காக கவனித்துக் கொண்டிருத்தல்

பதினெட்டு நூற்றாண்டுகளாக தேவனுடைய உண்மை-யான ஜனங்கள் மகிமையான ஆயிர வருட நாள் உதயமாவதற்காக கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். வேதாகமம் கற்பிக்கிறபடி, அந்தகார பிரபுவினுடைய ஆட்சியின் கீழாக உலகமானது இருளில் உள்ளது என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்; அவன் இப்போது அறியாமை, பலவீனம் முதலியவற்றால் கீழ்ப்படிதலின் பிள்ளைகளைப் பார்க்கிலும் அதிக எண்ணிக்கையில்

இருக்கிற "**கீழ்ப்படியாமையின் பிள்ளைகளாயிருக்கிறவர்கள்**" மீதான தனது கட்டுப்பாட்டின் மூலம் அதிகாரம் செலுத்து-கிறான். (எபே. 2:2).

இயேசுவினுடைய சீஷர்கள், பழைய ஏற்பாட்டினுடைய தீர்க்கதரிசிகளின் சாட்சியத்தின் மூலமாகவும், புதிய ஏற்பாட்டில் இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் வார்த்தைகள் மூலமாகவும், "**தேவனுடைய நேசக் குமாரனின் ராஜ்யத்தை**" எதிர்பார்த்திருக்கிறார்கள். காத்திருக்கும் காலம் எவ்வளவு தூரம் என்பது அவர்களுக்குத் தெரியாது; அவர்கள் இந்த விஷயத்தை முறையாக கர்த்தருடைய கைகளிலேயே விட்டுவிட்டார்கள். பூமிக்குரிய கண்ணோட்டத்-தில், பாவம் உலகத்தில் நுழைந்து நீண்ட காலமாகிவிட்டது, அதாவது ஆறாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது! இயேசுவானவர் உலகத்தின் பாவங்களுக்காக மரித்தும் நீண்ட காலமாகிவிட்டது, கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளாகிவிட்டது! தெய்வீக நிலைப்பாட்டிலிருந்தோ, ஆயிரம் வருஷம் ஒருநாள் போல இருக்கிறது என்று கர்த்தர் அறிவிக்கிறார். (2 பேது.3:8).

நாம் இப்போது புதிய நேமகத்தின் விடியலைக் காணத் தொடங்குகிறதோடு, ஆதாமிலிருந்து ஆறு பெரிய நாட்கள் ஏற்கனவே கடந்த காலத்தில் இருப்பதை உணர்கிறோம். காலக்கணக்கின்படி நாம் மகத்தான ஏழாம் நாளுக்குள் அல்லது ஓய்வு நாளுக்குள் பிரவேசித்திருக்கிறோம், இது ஆயிரம் வருஷங்களுக்கு நீடிக்கும். (2009) நூற்று முப்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக இந்த பெரிய ஓய்வு நாளில் நாம் இருந்திருக்கிறோம் என்று பார்க்கிறோம். இதோ, இந்த ஆண்டுகள் எப்பேற்பட்ட அதிசயமான வருடங்களாக இருந்திருக்கின்றன! அவைகளைப் போல முன்பு எப்போதும் இருந்ததில்லை. ஏறக்குறைய நம்முடைய நவீன வசதிகள் அனைத்துமே இந்த காலக்கட்டத்தில்தான் நம்மை வந்தடைந்தன. படிப்படியாக மனிதனுடைய உழைப்பு மற்றும் வியர்வையின் அவசியத்திலிருந்து அதிக சுதந்திரத்தை அடைகிறதோடு, சுய முன்னேற்றத்திற்கு அதிக நேரமும் கிடைக்கிறது. வாழ்க்கையினுடைய வசதிகள் எல்லா திசைகளிலும் பரவிக் கொண்டிருக்கின்றன. படிப்படியாக வனாந்தரம் புஷ்பத்தைப் போல செழிக்கின்றது, கர்த்தர் முன்னறிவித்தபடியே, வறண்ட நிலங்கள் ஏதேன் தோட்டத்தைப் போல மாறி வருகின்றன. (ஏசா. 35:1; எசே. 36:35).

இந்த ஆசீர்வாதங்களெல்லாம் ஏதோ அதிசயமான வழியில் வந்துவிடவில்லை, அதற்கு மாறாக இவை-களெல்லாம் கர்த்தராலேயே வந்திருக்கின்றன. அவர் மனிதர்களுடைய மனதின் முக்காட்டை விலக்குகிறார்: மாயாஜாலத்தினால் நம்முடைய வயல்கள் அவற்றின் பெருக்கத்தைத் தருகின்றன, ஆர்ட்டீசியன் (ஆழமாக இருக்கிற நீர் நிலையில் ஏற்படும் அழுத்தம் காரணமாக இயற்கையாகவே மேற்பரப்புக்கு பாயும் நீர்) கிணறுகள் பாலைவனங்களுக்கு புத்துணர்ச்சி அளிக்கின்றன; மனிதத் திறமையானது அற்புதமான பூக்கள் மற்றும் பழங்களால் பூமியை நிரப்புகின்றன. நம்முடைய தெருக்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் நம்முடைய வசதி மற்றும் போக்கு-வரத்துக்கு வசதியான ஏற்பாடுகளால் நிரம்பியுள்ளன; அவை முழு உலகத்திலுள்ள பொக்கிஷங்களையும் நம்மண்டைக்கு கொண்டு வருகின்றன.

விசுவாசக் கண்களால் நிழல்கள் விலகிச் செல்வதைக் காண்கிறோம். இருந்த போதிலும், மேசியாவின் ராஜ்யம் இன்னும் முழுமையாக ஸ்தாபிக்கப்படவில்லை; பாவம், சுயநலம் மற்றும் மரணத்தின் அனைத்து இருளையும் சிதறடிப்பதற்கு நீதியின் சூரியன் தனது கதிர்களில் குணப்படுத்துதலுடன் இன்னும் முழுமையாக உதிக்க-வில்லை. பரலோக மற்றும் பூமிக்குரிய வகுப்புகளில் தெரிந்தெடுக்கப்பட்ட அனைவரும் நிறைவு செய்யப்பட்டு அவர்களுடைய ஸ்தானங்களில் நிலைப்படுத்தப்படும் வரை இது முழுமையாக நிறைவேற்றப்படாது, அதாவது ராஜ்யத்தின் பரலோக அல்லது பூமிக்குரிய பிரிவுகளில், அவர்களுடைய மகிமைப்படுத்தப்பட்ட கர்த்தரால் அனைத்து மனுக்-குலத்தையும் மீட்டெடுப்பதற்கான வேலையை செய்வதற்காக தெரிந்தெடுக்கப்பட்ட நீங்கள் அனைவரும் அவர்களுடைய ஸ்தானங்களில் நிலைப்படுத்தப்படும் வரை இது முழுமை-யாக நிறைவேற்றப்படாது; ஏனெனில் தெரிந்தெடுக்கப்-பட்டவர்களும் தம்மோடுகூட சேர்ந்தே "**நீதியின் சூரியனாக**" இருக்கப் போகிறார்கள் என்று அவர் அறிவித்துள்ளார். மனுக்குலம் முழுவதும் ஏதேனில் இழந்து, கல்வாரியில் மீட்கப்பட்ட தேவனுடைய ரூபத்திற்கும் சாயலுக்கும் திரும்பும்படியாக அந்த நீதியின் சூரியனானது உலகத்தின் தீமையையும் பாவத்தையும் சிதறடிக்க இருக்கிறது. (மத். 13:43).

***


Visit us at : **www.biblestandardindia.com**

**For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact:**

**Laymen's Home Missionary Movement**

**Bro. V. Vincent Jeyakumar**

**[Representative of India]**

#4/81, Eluvaraimukki Main Road, Eluvaraimukki Post, Near Thoppur,
Nazareth - 628 617, Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincentlhmm@gmail.com; Cell : 98949 26629



**FOR PRIVATE CIRCULATION ONLY**